விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 04 திங்கட்கிழமை (17.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 119

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யாழ்ப்பாணத்தில் குண்டர்கள் குவிப்பு பாதுகாப்பான இடத்திற்கு நகருங்கள்

### தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மிகப்பெரிய தமிழின அழிப்பிற்காக இராணுவத்தினருடன் இன வெறி பிடித்த காடையர்களும் ,குண்டர்களும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

குறிப்பாக இன்று யாழ்.குடாநாட்டில் மூலை முடுக்கெல்லாம் இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் கொலைகளுடம் நடந்தேறி வருகின்றமை அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது.

அத்துடன் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் பணியாளர்களும் யுத்த சூழல்காரணமாக வெளிறேத் தொடங்கி விட்டனர். சர்வதேச கண்காணிப்பாளர்கள் இங்கிருக்கும் போதே தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் படையினரால் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இந் நிலையில் அவர்கள் வெளியேறினால் நிலைமை மேலும் மோசமடையும். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழின அழிப்பிற்காக காடையர்களும் ,குண்டர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே அன்பான எம் உறவுகளே நீங்கள் பாதுகாப்பான இடம் நோக்கி நகருங்கள். வழமைபோல் என்று இருந்து விடாதீர்கள். எதிரியின் பிடியில் இருந்து உங்களை விடுவித்து யாழ்.குடாநாட்டில் இருந்து எதிரிகளை விரட்ட ஒத்துழையுங்கள். நம்பிக்கையோடு நகருங்கள். இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பரடசாலை தவணை அறிவிப்பு

பாடசாலைத் தவணை விடுமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரட்ண கேவகே தெரிவித்துள்ளார்.இம் மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சை அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டமையே இதற்கானகாரணம் என அவர் தெரிவித்தார்.

இதற்கமைய இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி முதல் மே மாதம் 19 ஆம் திகதி வரை நடைபெறும். மீண்டும் பாடசாலைகள் யூன் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரை நடைபெறும்.மூன்றாம் தவணைக்குரிய பாடசாலை நாட்கள் செப்ரம்பர் 4 ஆம் திகதி முதல் டிசம்பர் 8 ஆம் திகதி வரையாகும். பரீட்சை நிலையங்களாக அமையும்பாடசாலைகளிலும் இந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந)

## மட்டுவிலில் கிளைமோர் படைத்தரப்பில் ஒருவர் பலி

மட்டுவில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் படையினர் ஒருவர் பலியானார்.

மற்றொரு படையினர் படுகாயமடைந்தார். மட்டுவில் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலின்போது இரண்டு படையினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரையும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது ஒருவர்பலியானார். மற்றவர் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந.9)

## ஜெனீவாப் பேச்சுக்கு வரமுடியாதுள்ளது

### நோர்வே தூதருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

இலங்கை அரசு எமது தளபதிகளின் பயணத்தை குழப்பியதை நாம் கண்டிக்கின்றோம். எமது வான் வழிப்பயணத்தையும் நிராகரித்து கண்காணிப்புக்குழு ஒழுங்கமைத்த கடற் பயணத்தையும் குழப்பியதால் நாம் ஜெனீவாவுக்கு வரமுடியாதவொரு இக்கட்டான நிலையில் உள்ளோம்.

இதையிட்டு நாம் மிகவும் கவலை கொண்டுள்ளோம். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கருக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ச. செ . பணிப்பாளர் க.கா.குழுத்தலைவர் சந்திப்பு

(கொழும்பு)

அரச சமாதான செயலகத்தின் தலைவர் கலாநிதி பாலித ஹொகனவுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக பாலித ஹொகன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளை வன்னிக்கு அழைத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் சிலவற்றிற்கு தீர்வு காணப்பட்டுள்ளது. சில விடயங்களில் இன்னமும் தடங்கல் நிலை காணப்படுகின்றது எனக் குறிப்பிட்ட பாலித ஹொகன ,அதுவும் இன்றைய தினத்தில் தீர்க்கப் பட்டுவிடும் எனத் தெரிவித்தார்.

இருப்பினும் ஏற்றுக்கொள்ளப் பட்ட விடயங்கள் ,ஏற்றுக்கொள்ளப் படாத விடயங்கள் எவையென்பன தொடர்பில் அவர் தீர்க்கமான பதில்களை வழங்கவில்லை.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஜெனிவாநகரில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் கலந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## 4ம் ஈழப்போர் தொடங்கும்!

### கொழும்பு ஊடகம் ஆரூடம்

(கொழும்பு)

ஜெனீவா இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் நான்காம் ஈழப்போர் தொடங்குமென கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் விடுதலைப்புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தால் அத்தகைய நிலைக்கு முகம் கொடுப்பதற்கு பாதுகாப்புப் படையினரை தயார்நிலையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் யுத்தத்தினைத் தொடங்கினால் அது நான்காவது ஈழப்போரின்தொடக்கமாகக்கருதப்படும்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் கலந்துகொண்டாலும் அதன் இறுதி வரை அவர்கள் காத்திருப்பார்கள் என்பது நிச்சயமற்றது என சில தரப்பினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காலக்கெடு விதித்தால் நாடாளுமன்ற கலைப்பு

### ஜே.வி.பிக்கு ஜனாதிபதி மிரட்டல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு காலக்கெடு விதித்து அழுத்தம் கொடுத்தால் பொதுத்தேர்தலை நடத்துவோம் என்று ஜே.வி.பியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிரட்டியுள்ளார்.

சமாதான செயற்பாடுகளில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதற்கான ஆர்ப்பாட்டங்கள்,யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்கான ஆர்ப்பாட்டங்களை ஜே.வி.பி.நடத்தவுள்ளது.

கட்சியைத் தொடர்ந்து நிலைக்கச்செய்வதற்காக மக்கள் முன்னிலையில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்தினாலும் அதனால் அரசாங்கத்தின் நிலைத்த தன்மைக்குப்பாதிப்பினை ஏற்படுத்த தேவையில்லை என்று ஜே.வி.பி.தீர்மானித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.


எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# வித்தியா தீபம் - ஓர் அறிமுகம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவுமலர் (2005) 'வித்தியாதீபம்' அண்மையில் வெளிவந்துள்ளது. இம்மலரின் உள்ளடக்கத்தைப் பின்வருமாறு




வகைப்படுத்தலாம்.

1) கல்லூரி நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்தல்.

2) கற்பித்தல் தொடர்பான பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆசிரிய கல்வியியலாளர்கள், ஆசிரியப் பயிலுநர்கள் ஆகியோ ரின் கட்டுரைகள்.

3) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கட்டுரைகள்.

4) பொதுவான வாசகர்களுக் கான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை.

மலரின் முகப்புத்தோற்றம் கல்லூரியின் பறவைப்பார்வை ஒளிப்படத்தையும், கடந்தகால வித்தியாதீபங்களின் படங்களை யும் கொண்டுள்ளது. வவுனியா குருமன்காடுகாளியம்மன் தேவஸ் தானத்தினால் அன்பளிப்புச் செய் யப்பட்ட கலைமகள் சிலையின் படம் மலரை அலங்கரிக்கிறது.

இந்தமலர் ஆசிரியப் பயிலு நர்களின் வகுப்புபறைக் கற்பித் தலுக்குப் புறம்பாக நடைபெறும் இணைப்பாடவிதான நிகழ்ச்சி களின் அறிக்கைகளையும் ஒளிப் படங்களையும் கொண்டுள்ளது. கல்லூரி நிகழ்ச்சிகளின் கண்ணா டியாக இந்தமலர் நிகழ்கிறது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் கட் டுரைகள் இடம்பெறுகின்றன. பீடாதிபதி அவர்களின் அறிக்கை 2005ஆம் ஆண்டில் வதிவிடப் பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட தமிழ் சிங்கள மொழிமூல ஆசிரியர் பயிலுநர்களின் விபரம் பாடநெறி ரீதியாகத் தருகிறது. கல்லூரியில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. கல்வி சார் கல்வி சாராத ஆளணியினர் விபரமும் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். கற்றலையும் கற்பித்தலையும் ஆளுமை விருந்தியையும் 6 மேம் படுத்தக்கூடிய ஆசிரியர்கல்வியான தும் பல்கலைக்கழக விரிவுரையாள ரதும் ஆசிரியப் பயிலுநர்களதும். பயனுள்ள கட் டுகளை இம் மலர் கொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல் கலைக்கழக விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி அவர்களின் அசிரி யர்களின் சமகாலக் கல்வித் தேவை கள் என்றும் கட்டுரை ஆசிரியர் களுக்குப் பல பயனுள்ள கருத் துக்களைத் தருகின்றது. 'உலகம யமாக்கலில் சமயக்கல் வியின் முக்கியத்துவம்' 'ஆன்மிகக் கருத் துக்களினூடாக ஆளுமை விருத்தி' விழுமிய மேம்பாட்டுக்குக் கல்வி யின் பங்களிப்பு, கல்வியினூடாக விழுமியங்கள், தமிழ்மொழி கற் பித்தல் முதலான கட்டுரைகள் ஆசிரியர்களின் கல்வியில் மேம் பாட்டுக்கு உதவுவன.

இன்றைய உலகில் கணனி யின் முக்கியத்துவத்தை 'தகவல் நடைமுறை மாதிரிக் கட்ட மைப்பு' தகவல் தொழில் நுட்ப விருத்தி கல்வியில் வேண்டி நிற்கும் மாற் றங்கள் என்னும் கட்டுரைகள் வலி யுறுத்துகின்றன.

ஆங்கிலத்தில் மாத்திரமின்றித் தமிழிலும் கல்வியியல் உளவி யல் நூல்கள் பல வெளிவந்துள் ளன. இதனை தமிழிலே 'கல் வியியல்' தொடர்பாக் வெளிவந்த நூல் விபரம் பட்டியல் என்னும் கட்டுரை குறிப்பிடுகின்றது.

'பாடசாலை மட்ட முகாமைத் துவம்மாற்றமுறும் அதிபர்வகிபங்கு, மேற்பார்வையும் நோக்கமும்' என்னும் கட்டுரைகள் முகாமைத் துவம் தொடர்பா னவை. கலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தை வலி யுறுத்தும் கட்டுரை ஒன்றும் பலில் இடம்பெறுகின்றது.

பொது வாசகர்களுக்கான புதிய உறவுகள் 'சிறுகதை' 'நல்லாசன்' 'இதுதான் வாழ்க்கை' 'பூந் தோட டம்' என்னும் கவிதைகள் 'பரம் பொருளும் ஒரு கடவுட் கோட்பாடும்' தமிழ்ப்பண் பாட்டில் திருக்குறள் என்னும் கட்டுரைகள் இம்மலரை அலங்கரிக்கின்றன. இவை ஆசி ரியர்களின் ஆளுமை விருத்திக் கும் பயன்படுகின்றன.

இந்துசமய கல்விச் சிந்தனை கள், கிறிஸ்தவ கல்விச்சிந்தனை, கள் இஸ்லாமிய கல்விச்சிந்தனை கள் என்னும் கட்டுரைகளும் இம் மலரில் இடம்பெறுகின்றன.

'பரம்பொருளும் ஒரு கடவுட் கோட்பாடும்' என்னும் கட்டுரை மிக ஆழமான தத்துவக் கருத்துக்களை ஆய்வுசெய்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து சிறந்த அதிபர்களாகவும், ஆசிரியர்களா கவும் கௌரவிக் கப்பட்டோரின் பட்டியல் ஒன்றும் இம்மலரில் இடம் பெறுகிறது.

**கலாநிதி முல்லைமணி**

தொகுத்து நோக்குமிடத்து ஆசிரிய உலகை மேம்படுத்த உத வும் பல அம்சங்கள் இம்மலரில் இடம் பெறுகின்றன. அழகான இம்மலரை உருவாக்க வழிகாட் டிய பீடாதிபதி திரு.க.பேர்ணாட் அவர்களும், மலர்க்குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள்.

வெளியீடு:- வித்தியாதீபம் மலர்க்குழு 2005
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் க.பேர்ணாட், பீடாதிபதி

## வேட்டைக்குசென்ற மூவர் கைது?

(வவுனியா)

பெரியமடுக்காட்டுப் பகுதிக் குள் கடந்த வியாழக்கிழமை வேட்டைக்குச் சென்ற மூன்று குடும்பத்தவர்களை படையினர் கைதுசெய்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

புளியங்குளம் பனிக்கை நீராவி பெரியமடுவைச் சேர்ந்தவர்களான தியாகராசா குகனேஸ்வரன் (வயது 36) சிவசம்பு நகுலேந்திரராசா (வயது 44) மற்றும் சேம மடு வினைச் சேர்ந்த சிவகுரு திர வியன் (வயது 32) ஆகிழி மூவ ருமே வேட்டைக்காக பெரியமடுக் காட்டுப்பகுதிக்குள் சென்றுள்ளனர்.

ஆனால் இவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என்று உற வினர்களால் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிட மும் முறையிடப்பட்டுள்ளது.

இம் மூவரும் படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கலாம் என்று உறவினர்களால் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## முறைசாராக் கல்வி

(கற்கோவளம்)

பருத்தித்துறை சித்தி விநாய கர் பாடசாலையில், முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் மனையி யல் பயிற்சி வகுப்பு நடத்தப்பட வுள்ளது.

இதனால் இப் பயிற்சி நெறி யில் கலந்து கொள்ள விரும்பு பவர்கள் தமது விபரங்களை உடன் பதிவுசெய்து கொள்ளுமாறு அதி பர் இ.நாகேந்திரராஜா கேட்டுள் ளார். (க-10)

## இராசி பலன்

**17.04.2006**
**(சித்திரை 4, திங்கட்கிழமை)**
**சதுர்த்தி முன்னிரவு11.29மணிவரை**
**அனுசம் பிற்பகல் 2.24மணிவரை**
**இராகுகாலம் 7.34-9.04மணிவரை**
**சுபநேரம் 12.04-1.34மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், பிரயாண கஷ்டம், தொழில் மந்தநிலை, காரியதாமதம். |
| இடபம் | கௌரவமான நிலை, நல்ல வருமானம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | சுகவாழ்வு, சுபநிகழ்வு, காரிய நன்மை, அதிகாரிகள் உதவி. |
| கடகம் | தாழ்ந்த சுபாவம், வியாபாரநன்மை, காரிய இடையூறு, புத்திரரால் கவலை. |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், அந்நியர் உறவு, முயற்சி தாமதம். |
| கன்னி | அன்னியர் சந்திப்பு, வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| துலாம் | மாதர் நட்பு, பொருள்விரயம், ரோகநிலை, சிந்தனை மிகுதி. |
| விருச்சிகம் | பெரியோர் ஆசி, நல்ல் முயற்சி, சயன சுகம், உறவினர் சந்திப்பு. |
| தனுசு | உணர்ச்சிவசப்படுதல், பணவிரயம், பிதா சிந்தை, முயற்சி தாமதம். |
| மகரம் | தொழில்சிந்தை, புகழ், தடைப்பட்ட காரியம் கைகூடும், கலந்துரையாடல். |
| கும்பம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, பிறர் உதவி, போசனசுகம். |
| மீனம் | உடல் உழைப்பு, வயிற்றுக்கோளாறு, அச்சமான நிலை, புதிய முயற்சி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
-வளவன்

வடக்கு-கிழக்கு மாகாண

# அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட 10கோடி ரூபா, வங்கியில் தவம் கிடக்கிறதாம்

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரசு நிதி வழங்கவில்லை யென தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழீழ விடு தலைப்புலிகளும் அடிக்கடி குற்றம் சாட்டிவரும் நிலையில், 10கோடிரூபா அரசினால் ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் வங்கியில் உள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த நிதி ஆண்டின் போது 2004-2005 வடக்கு-கிழக்கு அனர்த்த நிவாரண நடவடிக்கைக்கு அரசினால் வழங்கப்பட்ட 10கோடி ரூபாவே அபி விருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படாமல் வங்கிக் கணக் கில் இருப்பது தெரியவந்துள்ள தாம். கணக்காய்வாளர் திணைக் கள உயரதிகாரியினால் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக கணக் காய்வுகளை மேற்கொண்ட போதே இந்த விடயம் தெரிய வந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

கணக்காய்வாளர் திணைக் கள அதிகாரியினால் அண்மை யில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப் பிக்கப்பட்ட புதிய கணக்காய்வு அறிக்கையில், 10கோடி ரூபா மாகாண திறைசேரிக்கே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாகாண திறைசேரி யின் அதிகாரிகள் அப்பணத்தில் ஒரு சதத்தையேனும் அபிவிருத் திப் பணிகளுக்கு செலவிட்டாது, வங்கிக் கணக்கொன்றில் வைப் பிலிட்டு விட்டு, சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு இப்பணத்தை செல விட்டுள்ளதாக அறிவித்திருந்த னர் என குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இதற்கு மேலதிகமாக 2004/2005 நிதி வருடத்திற்குள் வடக்கு-கிழக்கு ஆசிரியர்க ளுக் கான நிலுவைச் சம்பளப் பணம் வழங் குவதற்காக அரசினால் அம் மா காண சபைக்கு வழங்கப்பட்ட 24 கோடி ரூபா வில், சம்பளத்தி காக செலவிடப்பட்டிருப்பது 15 கோடி ரூபா மாத்திரமே என கணக் காய் வுகளின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மீதமான 9 கோடி ரூபா அரச நிதிச்சட்டங்களுக்கு பாதிப்பு ஏற் படாத வகையில் வேறு நடவடிக்கை களுக்கு உபயோகப்படுத்தப்பட் டுள் ளதாக மாகாண திறைசேரி கணக்காய்வாளர்கள் அதிகாரி களுக்கு அறிவித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள் ளது.

இதேவேளை குறிப்பிட்ட நிதி ஆண்டிற்குள் மாகாண சபையின் சுகாதார பிரிவிற்கு ஊழியர் களது. நிலுவைச் சம்பளம் வழங்குவதற் காக அரசினால் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட 13 கோடி 80 இலட்சம் ரூபாவில் குறிப் பிட்ட காரியங்களுக்காக 10 கோடி ரூபா மாத்திரமே பயன்படுத்தப்பட் டிருந்ததாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-7)

புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில்

## சட்டவிரோதமாக மதுபானம் விற்றவர்கள் பொலிஸாரால் கைது

கடந்த 13,14ஆம் திகதிகளில் மதுபானம் விற் றவர்களுக்கு மற்றும் மதுபானங்களை பெரும் தொகையாக எடுத்துச்சென்றவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலால் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுகாலத்தில் தேவையற்ற பிரச்சினை கள் மற்றும் விபத்துக்களை தடுக்கும் முகமாக கடந்த 13,14 ஆம் திகதிகளில் மதுபான விற்பனை தடைசெய்யப்பட்டிருந்தது. இந்தத் தடையை மீறிய பலர் நாடெங்கிலும் இருந்து கைது செய்யப்பட் டுள்ளதாக கலால் ஆணையாளர் தெரி வித்துள்ளார்.

கொழும்பு, காலி, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் இருந்தே அதிக மானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தக் குற்றச்சாட் டிற்கு உட்பட்ட நபர் ஒருவருக்கு 5 இலட்சம் ரூபா வரையிலான அபராதம் விதிக்கப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட அபராத தொகையை செலுத்தத் தவ றும் நபர்களுடைய மதுபான விற்பனை உரிமையை யும் இரத்துச்செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார். முச்சக்கரவண்டிகளில் பெருந் தொகை மதுபானத்தை கொண்டு சென்றவர்களே இம் முறை அதிகளவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் அனுமதிப் பத் திரம் இல்லாதவர்களை நீதிமன்றத்தின் முன்நிறுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பிரச் சினையை தீர்க்கும் நோக்கில் புதிய செயற்திட்டமொன்று முன் னெடுக்கப்படவுள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணிய கம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்திட்டம் குறித்து வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களின் நலன்புரி அதி காரிகள் மற்றும் தொழில் அதிகாரி களுடன் கலந்துரையாடி வருவ தாக பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான மாநாடு இன்றும், நாளையும் டுபா யில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையர்கள் வெளி நாடுகளில் எதிர்கொள்ளும் பிரச் சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வு கள் பெற்றுக்கொடுக்க நடவ டிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரி வித்துள்ளார். (க-9)

# பாகிஸ்தான் சீனா இனப்பிரச்சினையில் தலையிட்டால் இந்தியாவுக்கு ஆபத்து!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


**பாகிஸ்தான் சீனா போன்றவை இலங்கை பிரச்சினையில் தலையிட்டால் இந்தியாவுக்கு ஆபத்தாக அமையும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

தமிழக வார இதழான ஆனந்த விகட னுக்கு அண்மையில் அளித்த நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைய நேர்காணலின் தொடர்ச்சியாக இது அமைகின்றது. பிரபாகரனின் திருமணத்தை நடத்தி வைத்தவர் அன்ரன் பால சிங்கம்தான்!

அந்த நிகழ்வை அழகாக விவரிக்கிறார்...

அப்போது பிரபாகரனுடன் நானும் சென்னையில் இருந்தேன். இந்தியா கொடுக்கிற இராணுவப் பயிற்சியை முறையாகப் பயன்



பிரபாகரன் திருமணத்தின் போது

படுத்துவதிலும் சரியான திட்டமிடலோடு பணியாற்றுவதிலும் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார் பிரபாகரன்.

இந்நிலையில் திருவான்மியூரில் நாங்கள் வசித்த வீட்டுக்கு மதி, வினோஜா, ஜெயா, லலிதா என்ற நான்கு இளம் பெண்கள் வந்தனர். யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர் களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்த இந்த நால்வரையும் சிங்கள இராணுவத்திடமிருந்து காப்பாற்றி சென்னைக்கு அனுப்பிவைத்திருந்தார்கள் போராளிகள்.

இந்த பெண்களுக்குக் குடும்பமோ உறவுகளோ இல்லாத நிலையில் பிரபாகரன் இந்த நால்வரின் நலனிலும் அக்கறையுடன் இருந்தார். இந்தப் பெண் களின் வருகை புலி கள் இயக்கத்துக் குள் ஒரு குட்டி புரட்சி ஏற்படக் காரணமாகும் என்று முதலில் நான் நினைக்கவில்லை.

எங்களுடைய அமைப்பைப் பொறுத்த வரை யாழ்ப்பாண இந்து மரபில் பேணக் கூடிய ஒழுக்கக் கோட்பாடுகள் எல்லாமே கண்டிப்பாகவும் கறாராகவும் கடைப்பிடிக்கப்பட்டன. திருமணத்துக்கு முன் ஓர் ஆணும் பெண்ணும் தனித்தனியே பிரிந்துதான் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டை போராளி களும் பேணினார்கள். மக்களிடமே பரந்த ஆதரவைப் பெற வேண்டுமானால் இந்தச் சமூகப் பண்பாட்டு அம்சத்துக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதில் பிரபாகரன் கவனமாக இருந்தார்.

இந்த ஒழுக்கக் கோட்பாட்டில் எனக்கும் உடன்பாடுதான் ஆனால் இந்த ஒழுக்க விதி கள் நெகிழ்ச்சித்தன்மை இல்லாமல் இறுக்கமாக இருப்பதில் உடன்பாடில்லை பிடிவாதத்தால் பேணப்படும் கட்டுப்பாடுகளைக் கட்டாயத்தால் கடைப்பிடித்தால் இயற்கை தன் போக்கில் ஆண்-பெண் உறவைத் தோற்றுவிக்கும். எங்கள் தலைவரின் விஷத்திலும் இதுதான் நடந்தது. வந்த நான்கு பெண் களில் மதி என்கிற மதிவதனியிடம் ஆழ்ந்த காதல் வயப்பட்டார் பிரபாகரன்.

மதியையும் பிரபாகரனையும் திருமண வாழ்க்கையில் இணைத்து வைக்கும் பொறுப்பு எனக்கும் அடேலுக்கும் இருந்தது. அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித் தனர். அவர்களிடம் தமிழ்ச் சமூகத் தில் காதலுக்கு உள்ள முக்கியத்துவத் தை எடுத் துப் பேசினேன் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு ஒப்புக்கொண்டார்கள்.


1984 ஆம் ஆண்டில் திருப் போரூர் கோயிலில் பிரபாகரனின் திரு மணத்தை தமிழ்முறைப்படி நடத்திவைத்தோம். ஒரு காதல் திருமணம் பிரபா கனின் திருமணம் நடந்தது. புலிகளி டையே நல்ல பல மாற்றங்களைத் தோற்றுவித்தது. இன்றைக்குப் போரா ளிகளுக் கிடையே காதல் திருமணங் கள் சாதாரணமாக நிகழ்வதற்கு மதி-பிரபாகரன் காதல் திருமணம் கூட ஒரு காரணமாக இருக்கலாம் என்று தன் நெருங்கிய நண் பனின் காதல் கதையை விவரித்துச் சிரிக்கிறார்.

அத்துடன் அன்ரன் பாலசிங்கம் சில கேள்விகளுக்கும் நிதானமாக பதிலளித்தார்.

***கேள்வி:*** இலங்கைப் பிரச்சினையில் இந்தியா விலகியிருப்பதால் பாகிஸ்தான் சீனா போன்ற நாடுகள் சில சுயநலன்களோடு இந்த பிரச்சினையில் தலையிடக் கூடும் என்று புலிகள் நினைக்கிறார்களாமே?

***பதில்:*** ஆம் "எங்களைப் பொறுத்த வரையில் இதற்கான ஒரு புறச்சூழல் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். தற்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் நெருங்கிய தொடர்புவைத்திருப்பவர்.

சில மாதங்களுக்கு முன் அவர் இந்தியா



வந்து இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டுத் தங்களுக்கு உதவவேண்டும் என்று கோரினார். நீங்கள் சமாதான வழியில் ஓர் அரசியல் தீர்வை முன்வைத்து இந்தப் பிரச்சினையைத் தீருங்கள். அதைத்தான் நாங் கள் விரும்புகிறோம் என்று கைவிரித்து விட் டது இந்தியா.

தற்போது பாகிஸ் தானிடமும் சீனாவிடமும் ஆயுதங்களை வாங்கி சிங்கள இராணுவத்தை பலப்படுத்தி புலிகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தை துவங்க திட்டமிட்டிருக்கிறது இலங்கை அரசு. அதற்காகத்தான் ஜனாதிபதி ராஜபக்ஷ போன வாரம் பாகிஸ்தான் சென்றார். அங்கே ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஆயுதங்களைப் பெற்று இலங்கை இராணுவத்தைப் பலப் படுத்தி புலிகளுக்கு எதிரான ஒரு யுத்த தயாரிப்பில் இறங்கி இருக்கிறார்.

இதேபோன்று அவர் அடுத்த மாதம் சீனாவுக்கு சொல்லவிருக்கிறார். பாகிஸ்தான், சீனா போன்றவை இந்தப் பிரச்சினையில் தலையிட்டால் இந்தியாவின் செல்வாக்கு நிரம்பிய இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கும் விஸ்திரதன்மைக்கும் பங்கத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகும். அது இந்தியாவுக்கும் ஆபத்தாக அமையும்.

***கேள்வி:*** "இன்னொரு பக்கம் இந்தியாவை மட்டுமே அழைத்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்று இலங்கையின் ஜே.வி.பி அமைப்பு கூறிவருகிறதே?"

***பதில்:*** அது வேறு கணக்கு! ஜே.வி.பி ஒரு தீவிரவாத கம்யூனிஸ் அமைப்பு. சிங்கள பேரின வாதத்தை இலட்சியமாகக் கொண்ட ஒரு தீவிரவாத இயக்கம் அவர்கள். 1983ஆம் ஆண்டுக்குப்பிறகு ஈழப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை கண்டித்து பெரும் புரட்சிகளை ஏற்படுத்தியவர்கள். இந்தியத்துருப்புக்கள் ஈழமண்ணில் வந்து இறங்கிய போது அதை எதிர்த்து இலங்கை பெரும் கிளர்ச்சி



களை நடத்தியவர்கள். இவர்கள் தற்போது இலங்கைப்பிரச்சினையில் மீண்டும் இந்தியா தலையிட வேண்டும்.என்று அழைக்கிறார்கள் என்றால் அதற்குக்காரணம் இந்தியா மீதான நன்மதிப்பல்ல இந்த பிரச்சினையில் இந்தியா தலையிட்டு இராணுவ ரீதியாக புலிகள் இயக்கத்தை அளிக்க வேண் டும் என்பதே அவர்களின் உள்ளார்ந்த விருப்பம்.

***கேள்வி:*** "கிழக்கு இலங்கையில் உள்ள ஜிகாத்குருக்கள் பற்றி தாங்கள் சமீபத்தில் கவலை தெரிவித்து சில கருத்துக்களை வெளியிட்டி ருந்தீர்களே?"

***பதில்:*** ஆம் கிழக்கு மாகாணங்களில் தற்போது ஜிகாத் என்ற பெயரில் இஸ்லாமிய தீவிர வாத அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு பாகிஸ்தான் நிதி யுதவியும் ஆயுதப் பயிற்சியும் வழங்கியுள்ளது. இங்கிருந்து பல இளைஞர்கள் பாகிஸ்தான் சென்று இராணுவ பயிற்சி பெற்று திரும்பியிருக் கிறார்கள். வடகிழக்கு இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் தமிழர்களும் காலம் காலமாக சகோதரர்களாக பழகி வருகிறார்கள். இந்த நல்லுறவை கெடுத்து எமக்குள் பிளவை ஏற்படுத்தும் நோக்கிலேயே இலங்கை புலனாய்வுத் துறை அதிகாரிகளும் பாகிஸ்தான் புலனாய்வுத்துறையினரும் இணைந்து சில இஸ்லாமிய அமைப்புக் களை பயன்படுத்தி இந்தப் புதிய சதி வேலையை செய்திருக்கிறார்கள். இதுகுறித்து அனைத்து விபரங்களையும் அரசாங்கத்திற்கும் நோர்வே அரசாங்கத்திற்கும் சர்வதேச உலகத்திற்கும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

இலங்கை அரசு இப்போது அவசர அவசரமாக இஸ்லாமிய படைப்பிரிவு ஒன்றினைக்கிழக்கு இலங்கையில் அமைத்து அதை வைத்து முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. இது மிகவும் ஆபத்தான விஷயம் இஸ்லாமிய இளைஞர்களை அணிதிரட்டி அவர்களின் கையில் ஆயுதங்களைக் கொடுத்து அவர்களை



விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகத் திசை திருப்பும் நோக்கத்துடன் தான் சிங்கள அரசு இந்தக்காரியத்தைச் செய்திருக்கிறது.

***கேள்வி:*** "விடுதலைப்புலிகளின் மீதான பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டுக்குத் தங்கள் பதில்தான் என்ன?"

***பதில்:*** எங்களது இயக்கம் நீண்ட வரலாறு கொண்ட ஒரு விடுதலை இயக்கம் 18ஆம் ஆயிரம் போராளிகள் தங்கள் உயிரைத்தியாகம் செய்து ஆக்கிரமிப்பில் ஒரு நிழல் அரசாங்கத்தை நடத்தி வருகின்றோம். ஆனால் இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எமது போராட்டத்தின் வரலாறு அதன் உள் நிகழ்வுகள் புலிகள் செய்த மகத்தான தியாகங்கள் ஆகியவற்றைத் தமிழக மக்கள் தெரிந்துகொள்ளும் நாள் விரைவில் வரும். அப்போது எம்மைப் பற்றிய உண்மைகளை அவர்கள் அறிந்து கொள்வார்கள் எமக்கு தமிழக மக்களுக் கான தொப்புள்கொடி உறவை அறுக்க நினைப்பவர்கள் அப்போது காணாமல் போவார்கள்.

***கேள்வி:*** "கருணா ஏன் இந்த இயக்கத்திலிருந்து வெளியேறி உங்களுக்கு எதிராக மாறினார்?"

***பதில்:*** கருணா எங்கள் அமைப்பில் ஒரு தளபதி யாக இருந்தவர் ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவரைப் பற்றி பல புகார்கள் வந்தன. குறிப்பாக இயக்க நிதியில் பெரும் மோசடி செய்து தனிப்பட்ட வங்கிகளில் காசுகளைப் போட்டுசில ஊழல்களிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார் இயக்கத் தலைமைக்குத் தெரியாமல் வயது குறைவான பள்ளிச் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்து அவர்களைத் தனக்குக் கீழான ஒரு சிறுவர்படையணியாக உருவாக்கினார்.

இவரை விசாரணைக்காக வன்னிக்கு அழைத்தார். விசாரணைக்குப் போனால் தனது குற்றங்கள் அம்பலத்துக்கு வரும் இயக்க ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்ற பயத்தில் கருணா திடீரென்று இயக்கத்திலிருந்து விலகி எங்களுக்கு எதிராக அறிக்கைகள் வெளியிட்டார். ஆனால் நாங்கள் உடனடியாக எங்கள் படையணிகளை அனுப்பி அவரது கட்டுப்பாட்டுப்பிரதேசங்களை மீட்டெடுத்தோம்.

***கேள்வி:*** நீங்கள் வெளிநாடுகளில் இறுதி யுத்தம் என்ற பெயரில் அங்குள்ள தமிழர்களை மிரட்டிக்கட்டாய நிதி வசூலில் ஈடுபட்டு வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதே...?


***பதில்:*** இல்லவே இல்லை! ஆனால் ஈரத்துடன் இங்கே இன்றைய பதிவு செய்ய விரும்புகிறேன்... உலக நாடுகளில் வசிக் கும் புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் ஈழத்தி லுள்ள தமிழர்களின் ஜீவாதாரத்துக்கு காலங்காலமாக உதவி வருகிறார்கள் பொருளாதார ரீதியாகத் தமிழீழம் ஒதுக்கப்பட்டிருக்கிறது வேலையின்மை, வறுமை, போர் அழிவு, இயற்கை இடர்பாடுகள்... இப்படிப் பல துயரங்களை எமது சமூகம் அங்கு சந்தித்து வருகிறது

எமது மக்களுக்கு இலங்கை அரசாங்க உதவிகள் எதுவும் கிடைப்பதில்லை எங்கள் மக்கள் தாமாக மன மூவந்து செய்யும் கொடையினால்தான் எமது இயக்கமும் இயக்க வேலை களும் சமூக அமைப்புக்களும் இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

தாய் மண்ணுக்காக எம் தமிழ்ப்பிள்ளைகள் தருகிற நிதி இது! என்றார். (முற்றும்)

# புத்தாண்டு பலாபலன்கள்

# உங்கள் ராசிக்கு எப்படி?



## மிதுனம்

*உடல் ஆரோக்கியம்:-* உங்களது உடல் நிலையில் சிறப்பான நிலை காணப்படும். உங்களது உடல் சோர்வுகள் மறைந்து விடும். மனைவி மற்றும் குழந்தைகளின் நலமும் சிறப்புடன் அமையும். மருத்துவச் செலவுகள் குறைந்துவிடும். பிற்பாதிக்கு பிறகு சற்றே கவனமுடன் செயல்பட வேண்டும். சிறிது அலைச்சல், டென்ஷன் உண்டாகும். வெளியூர் வெளிநாட்டுப் பயணங்களை சற்று தள்ளிப் போடுவது உத்தமம். பெற்றோர்களின் வழியில் சிறிது செலவுகள் உண்டாகும்.

*கொடுக்கல் வாங்கல்:-* கொடுக்கல் வாங்கலில் முற்பாதியில் சிக்கல்கள் விலகி விடும். பெரிய தொகைகளையும் கையாண்டு நல்ல லாபம் பெறுவீர்கள். வம்பு வழக்குகளும் வெற்றியினை தரும். பிற்பாதி காலத்தில் எதையும் சற்று சிந்தித்து செயல்பட வேண்டும். முன் ஜாமீன் தருவது வாக்குறுதியை தருவதை தவிர்ப்பது உத்தமம். தேவையில்லாத நபர்களால் உடன் இருப்பவர்களை சந்தேகிக்க கூடிய சூழ்நிலைகள் உருவாகும் நிதானம் தேவையாகும்.

*தொழில் வியாபாரம்:-* உங்களுடைய தொழில் வியாபாரத்தில் முன்னேற்றங்களை சிறப்பாக முற்பாதியில் முன்னேற்றங்களைக் காணமுடியும். பிற்பாதியில் சுமாரான லாபம் உண்டாகும். புதிய தொழில் தொடங்குவது பெரிய முதலீடுகளை செய்வது போன்ற முக்கிய முடிவுகளை பிற்பா தியை விட முற்பாதியில் செய்தால் ஓரளவுக்கு மேன்மையான பலன்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்றவற்றில் படிப்படியான ஏற்றமும் லாபமும் அமையும்.

*உத்தியோகத்தர்களுக்கு:-* மேலதிகாரிகளின் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவீர்கள் உத்தியோகத்தில் உங்களுக்கு முறையாக வரவேண்டிய பதவி ஊதிய உயர்வுகள் முற்பாதியில் சாதகமாகும். புதிய வேலை கிடைக்கும். 28.10.2006உங்களது வேலையில் சற்றே கடின உழைப்பினை மேற்கொள்வீர்கள். உடன் ஊழியர்களுடன் சிறு சிறு வீண் பிரச்சினைகள் தோன்றும். சிலர் வெளியூர் வெளிநாட்டிற்கு பயணம் மேற்கொண்டு அலைச்சலை சந்திப்பார்கள்.

*பெண்களுக்கு:-* மனதில் மகிழ்ச்சியும் குடும்ப வாழ்வில் பூரிப்பும் உண்டாகும். கணவன் மனைவி இடையே ஒற்றுமையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் உண்டாகும். ஆடை ஆபரணம் சேரும் தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் தற்போது நடைபெற்றுவிடும். அழகிய ஆண்புத்திர பாக்கியமும் அமையப்பெறும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். பிற்பாதியில் சற்றே உடல்நல பாதிப்பு ஏற்பட்டு மறையும் கணவன் மனைவி அனுசரித்துப் போவது உத்தமம்.

*மாணவ மாணவியருக்கு:-* உங்களுக்கு கல்வியில் இருந்த தடைகளும் மந்தமான நிலைகளும் மாறி படிப்படியாக உயர்வும் நல்ல மதிப்பெண்ணும் கிட்டும். ஆசிரியர்களிடம் நற்பெயர் எடுப்பீர்கள். உங்களது முயற்சியால் முன்னேற்றத்தை அடைவீர்கள். மேற் கல்விக்கான முயற்சிகளை மேற்கொண்டால் நல்லது நடக்கும். வெளியூர் வெளிநாட்டில் தங்கிப்படிக்கும் மாண வர்களுக்கு அரசாங்க உதவிகள் தக்க சமயத்தில் அமையும்.

*கலைஞர்களுக்கு:-* உங்களுக்கு இக்காலத்தில் முற்பாதி காலம் வெகு சிறப்பான தன வரவுகளும் பிற்பாதியில் முயற்சிகளால் முன்னேற்றமும் அடையும். உங்களது படவரிசைகள் மிகவும் சிறப்பாக அமையப் பெற்று அனைவராலும் பாராட்டும் படியான கதாபாத்திரங்களையும் ஏற்று செயல்படுவீர்கள். ரசிகர்கள் மற்றும் மக்களின் ஆதரவுகள் கூடும் கல்விக்காகவும் உதவி செய்வீர்கள்.

*பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:-* அரசியலில் உங்களுக்கு நிலவிய சங்கடங்கள் மறையும். புதிய உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொண்டர்களுக்கு வேலை வாய்ப்புகளை உண்டாக்கித் தருவீர்கள். பெயர் புகழ் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களை கூடுமான வரையிலும் அனுசரித்து போவது நல்லது.

*தொழிலாளர்களுக்கு:-* உங்களது உழைப்பினால் உயர்வை அடையும் காலமும். தொழிலாளி உறவுகள் சிறப்பாக அமையும். நல்லவர்களின் சேர்க்கையால் ஒற்றுமையால் உதவும் மனப்பான்மைகளும் உருவாகும். புதிய நிரந்தரமான வேலை வாய்ப்பு கிட்டும்.

*14.04.2006 முதல் 29.06.2006 வரை*

உங்கள் ராசிக்கு இக்காலத்தில் குரு வக்ரம் பெற்றிருப்பதும் ஏழரைச்சனியில் பாதச்சனி நடைபெறுவதாலும் நீங்கள் எந்த ஒரு செயலிலும் சற்று நிதானமாக செயல்பட்டால் படிப்படியான மேன்மைகளைப் பெற முடியும். உங்களுக்கு உடல் நலம் சுமாராக இருக்கும் அடிக்கடி சிறு சிறு உபாதைகள் உண்டாகி மறையும். மருத்துவச் செலவுகள் சற்றே குறையும். மனைவியின் உடல் நலத்தில் சற்று கவனமுடன் செயல்பட்டால் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். கர்ப்பக் கோளாறுகள் மறைந்து புத்திர பாக்கியம் உண்டாகும். புத்திரர்களின் வழியில் ஏற்பட்ட மன சஞ்சலம் சற்றே குறையும். வெளியூர் வெளிநாட்டுப் பயணங்களில் சிறு சிறு அலைச்சல் ஏற்பட்டாலும் அனுகூலத்தையும் அடைவீர்கள். திருமண சுபகாரியங்கள் தடை தாமதத்துடன் பிற்பாதியில் முயற்சியை செய்தால் பலனை அடைவீர்கள். உற்றார் உறவினர், நண்பர்களுடன் எற்பட்ட மன கசப்புகள் குறைந்து உதவிகளை பெற முடியும் கணவன் மனவைி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், விட்டுக்கொடுத்து போனால் சற்றே ஒற்றுமையுடன் அமையலாம். சிலருக்கு தாமதித்து புத்திர பாக்கியம் அமையும். கொடுக்கல் வாங்கலில் சற்றே எச்சரிக்கையுடன் செயல்படுவதும் பெரிய தொகைகளையும் வாக்குறுதிகளையும் தவிர்த்து விடுவது உத்தமம். தொழில் வியாபாரம் ஓரளவுக்கு லாபம் தரும் என்றாலும் தற்போது பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதோ தவிர்த்துவிட வேண்டும். கொள் முதல் பொருட்களில் கவனம் தேவை கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையே அனுசரித்து போக வேண்டும் உத்தியோக நிலையில் உயர் அதிகாரிகளிடம் சிறு சிறு மனஸ்தாபம் ஏற்பட் டாலும் உங்கள் மீது மதிப்பும் மரியாதையும் தருவார்கள் பதவி ஊதிய உயர்வு தாமதப்பட்டுவரும் மாணவர்களின் கல்வியில் மேன்மை ஏற்படும்.

*30.06.2006 முதல் 20.10.2006 வரை*

உங்களுக்கு இக்காலத்தில் பஞ்சம ஸ்தானமான 5ஆம் வீட்டில் குரு பகவான் சஞ்சரிப்பதால் உங்களது வாழ்வில் கடந்தகால சோர்வுகள் யாவும் விலகும். உங்களது உடல்நலம் மிகவும் சிறப்புடன் அமையும். மனதில் பூரிப்பும் மனமகிழ்ச்சியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத இனிய நிகழ்ச்சிகளும் நடைபெறும். பிள்ளைகளால் உண்டான மருத்துவச் செலவுகள் மறைந்துவிடும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் மறைந்து அன்னியோன்யமாகக் காணப்படுவார்கள். உற்றார் உறவினர் நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் அமையும். பூர்வீக வழியில் சொத்துக்கள் சேரும். திருமண சுபகாரிய முயற்சிகள் தடபுடலாக நடக்கும். வீடு மனை வண்டி வாகனம் ஆடை ஆபரண சேர்க்கைகளும் உண்டாகும். பொருளாதார நிலையில் தாராளமான பணவரவுகள் உண்டாகி கடன்களை அடைத்துவிடுவீர்கள். சேமிப்புகள் அதிகரிக்கும். கொடுக்கல்வாங்கலில் சிறப்பான அனுகூலப் பலனை அடைவீர்கள். பெரிய தொகைகளையும் கொடுத்து பெரிய மனிதர்களின் ஆதரவை பெறுவீர்கள். வம்பு வழக்குகளில் பிரதானமான வெற்றிகள் குவியும். தொழில் நிலையில் முன்னேற்றமும் அபிவிருத்தியும் ஏற்படும். வியாபாரிகளுக்கு கொள் முதல் பொருட்கள் சிறப்பான லாபத்தை உண்டாக்கும் கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளுடன் நம்பிக்கை நாணயம் உண்டாகும். கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்றவற்றில் லாபம் உண்டாகும். உத்தியோக நிலையில் உயர் பதவிகளை வகித்திடும் யோகம் உண்டாகும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் அமையும் புதிய வேலை நிரந்தரமாக அமையும். அரசியல் வாதிகளுக்கு பெயர் புகழ் உண்டாகும். பதவியால்பெருமை உண்டாகும். மாணவர்களின் கல்வியில் சிறப்பான மேன்மை உண்டாகும்.

*21.10.2006 முதல் 2.12.2006வரை*

உங்களுக்கு இக்காலத்தில் குருபகவான் 6இல் சஞ்சரித்தாலும் சனி பகவான் அதிசஞ்சாரமாக உங்கள் ராசிக்கு 3இல் சஞ்சாரம் செய்வது சற்று ஆறுதல் தரும். இக்காலத்தில் நீங்கள் எதிலும் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. உங்களுக்கு சிறு சிறு பித்த நரம்பு சம்மந்தமான உடல் உபாதைகள் உண்டாகும். சிறிதளவு மருத்துவ செலவுகளுக்கு பின்பு படிப்படியாக உடல் நலம் முன்னேற்றமடையும். மனைவி மற்றும் குழந்தைகளின் உடல்ஆரோக்கிய விஷயத்திலும் சிறிது அக்கறை எடுப்பது நல்லது. அடிக்கடி வெளியூர் பயணம் உண்டாகும் என்றாலும் அதன் மூலம் அனுகூலப்பலனை பெறுவீர்கள். பிள்ளைகள் ஆரம்பத்தில் உதவி செய்யாவிட்டாலும் பின்பு உங்களுக்கு சாதகமாகவே அமைவார்கள். கணவன் மனைவி இடையே மனஸ்தாபம் அடிக்கடி ஏற்படும் என்றாலும் ஒருவரை ஒருவர் அனுசரித்து போனால் உதவியாகவும் நல்ல ஒற்றுமையும் பிற்பாதியில் ஏற்படும். உற்றார் உறவினர்கள் நண்பர்களின் மறைமுக எதிர்ப்பு கள் மறையும். திருமண சுபமுயற்சிகளை பிற்பாதியில் மேற்கொண்டால் மட்டுமே ஓரளவு சாதகமானப் பலனை அடைவீர்கள். பொருளாதார நிலையில் தாராளமான பணவரவை எதிர்பார்க்க முடியாது. எனவே சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டால் கையை கடிக்காது. கடன்களை பிற்பாதியில் அடைத்து சமாளித்து விடுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் வாக்குறுதி தருவது கூடாது. பெரிய தொகைகளில் கவனம் தேவை தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் கமிஷன் ஏஜென்ஸி போன்றவற்றில் வேலையாட்களையும் ஊழியர்களையும் அனுசரித்து நடந்துகொண்டால் மட்டுமே ஓரளவு லாபம் எதிர்பார்க்க முடியும். உத் தியோகநிலையில் அதிகாரிகளின் கெடுபிடி இருந்தாலும் உங்களது திறமைகளால் வேலைகளின் பளு குறையும். புதிய வேலை வாய்ப்புகள் தடை தாமதத்துடன் அமைந்தாலும் நல்ல ஊதியத்துடன் அமையும். மாணவர்களின் கல்வியில் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும்.

*3.12.2006முதல் 13.04.2007வரை*

உங்களுக்கு இக்காலத்தில் ஏழரைச்சனியில் கடைசி கட்டமான பாதச்சனி நடைபெறுவதும் குருபகவானும் சாதகமற்று ருணரோக ஸ்தானமான 6இல் உள்ள இக்காலத்தில் உங்களுக்கு உடல்நலக்குறைவுகள் உண்டாகும். சிலர் அதிகமான மருத்துவச் செலவுகளை செய்ய நேரிடும். புத்திரர்களின் வழியில் கவலை தரும் சம்பவங்கள் நடைபெறும். மனைவி வழியில் மன சஞ்சலம் உண்டாகும். கணவன் மனைவி இடையே அடிக்கடி சண்டை சச்சரவுகளும் உண்டாகும். சிலர் தொழில் உத்தியோக நிலைக்காக சில நாட்கள் பிரிந்துசென்று தனியாக வாழவும் நேரிடும். திருமண சுபகாரிய முயற்சிகளுக்கு இடையூறுகள் உண்டாகும். மனக் குழப்பத்தால் உற்றார் உறவினர்கள் நண்பர்களையும் புறக்கணிப்பீர்கள். அக்கம் பக்கம் உள்ளவர்களையும் வீண் பிரச்சினைக்காக பகைத்துக்கொள்ள நேரிடும். வெளியூர் பயணங்கள் சோர்வை ஏற்படுத்தும் அசையா சொத்து வகையிலும் வீண்செலவுகள் உண்மாகும். பொருளாதார நிலையில் எதிர்பார்த்த பணவரவுகள் தடைப்பட்டு குடும்பம் நடத்தவே சிரமம் உண்டாகும். கடன்வாங்கி காலத்தை தள்ள நேரிடும். கடன்களால் தொல்லை களும் உண்டாகி மன அமைதி குறையும். கொடுக்கல் வாங்கலின் சிக்கலில் சிக்கித் தவிக்க நேரிடும் பெரிய மனிதர்களை வீணாக பகைக்க நேரிடும். புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டும் முன் ஜாமீன் கூடாது. வம்பு வழக்குகளில் இழுபறி, தொழில் வியாபார நிலையில் கடுமையான போட்டி பொறாமைகள் உண்டாகும். லாபம் குறையும், பொருள் தேக்கம் ஏற்படும். கூட்டுத்தொழில் கூட்டாளிகள் கருத்து வேறுபாட்டால் பிரிவை சந்திப்பார்கள். கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்ற வற்றில் மிகவும் கவனம் தேவை. உத்தியோகநிலையில் உயர் அதிகாரிகளிடம் தேவையற்ற விரோதத்தால் எதிர்பாராத இடமாற்றம் உண்டாகும். மாணவர்களின் கல்வியில் மந்தமான நிலை ஏற்பட்டு மதிப்பெண் குறைவாகப் பெறுவார்கள். விவசாயிகளுக்கு மகசூல் பாதிக்கும்.

*பரிகாரம்:-* உங்கள் ராசிக்கு ஏழரைச்சனியில் பாதச்சனி தொடர்வதால் நீங்கள் சனிக்கிழமைகளில் விரதம் மேற்கொள்வது நல்லது. காகத்திற்கு எள் கலந்த அன்னம் வைப்பதும் உடல் ஊனமுற்றவர்களுக்கு ஆடை தானம் அன்னதானம் கொடுப்பதும் சனி பிடிக்காத இறைவனான ஸ்ரீ விநாயகர் ஆஞ்சிநேயரை சனிக்கிழமைகளில் தரிசித்து அர்ச்சனை ஆராதனை செய்வதன் மூலம் கெடுதிகள் குறையும். 20.10.2006முதல் குரு பகவான் 6இல் சஞ்சரிக்கும் காலத்தில் குரு காயத்திரி குரு மந்திரம் கூறி குரு தட்சிணாமூாத்திக்கு நெய் விளக்கு ஏற்றி வியாழக்கிழமைகளில் வணங்கி வருவது மூலம் உங்களுக்கு மேன்மை உண்டாகும்.

(தொடரும்)

# திருமலைப்படுகொலைகளுக்காக இலங்கை அரசை எச்சரியுங்கள்!

## இந்தியாப்பிரதமரிடம் நெடுமாறன் வேண்டுகோள்

**ஓவியர் புகழேந்தியின் தமிழீழம் நான் கண்டதும் என்னைக் கண்டதும் என்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமைவகித்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்று வெளியானது. அதன்தொடர்ச்சியை இங்கு தருகிறோம்.**

ஜெனீவாவிலே பேச்சுவார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தை விளைவாக சுமூகமான உடன்பாடு ஏற்பட்டது. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை 19ஆம் நாள் நடைபெறக் கூடிய நிலையில் இனவெறிக் கலவரத்தை மீண்டும் திட்டமிட்டுத் தொடங்கியிருக்கிறார்கள் எனில் அவர்களுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்பதுதான் இதன்மூலம் தெரிகிறது.

உலக நாடுகளை ஒருபக்கம் ஏமாற்றிக் கொண்டு மற்றொரு பக்கத்தில் திட்டமிட்ட இனவெறிப் படுகொலைகள் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். உலகம் இதை உணரவேண்டும். குறிப்பாக இந்திய அரசு இதை உணரவேண்டும்.

திருகோணமலையில் மட்டுமல்ல-அருகிலே உள்ள சம்பூரில் சிங்களக் கடற்படையினர் ஏவுகணைகளை ஏவி கிராமத்தைத் தாக்கியுள்ளனர். வீடுகள் பற்றி எறிந்திருக்கின்றன. 2தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

### விக்னேஸ்வரன் படுகொலை

இந்தக் கலவரச் சூழந்நிலையில் திருகோணமலையிலே தமிழ் மக்கள் பேரவைத் தலைவராகவிருந்த வன்னியசிங்கம் விக்னேஸ்வரனும் இலங்கை வங்கியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திருகோணமலையில் அந்த வங்கி எங்கே அமைந்திருக்கிறது எனில் இரண்டு பக்கமும் இராணுவ சோதனை சாவடிகள் -அந்த வங்கிக்கு எதிரே திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையம். அதற்குப்பக்கத்திலேகடற்படைத்தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்கு அண்மையில் தான். இவ்வளவும் இருக்கக் கூடிய அந்த இடத்தில் தான் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வெளியே இராணுவம், பொலிஸ் இருக்கிறது. எதிரிலே பொலிஸ்நிலையம் இருக்கிறது. ஆனால் சுட்டவர்கள் வங்கிக்குள்ளேயே ஓடியிருக்கிறார்கள்.

வங்கிக்குப் பின்னாலே சிங்கள இரகசியப் பிரிவு பொலிஸாரின் அலுவலகம் உள்ளது. அதற்குத் தான் ஓடி ஒளித்திருக்கிறார்கள். இன்று வரை அந்தக் கொலையாளிகளைப் பிடிப்பதற்கோ யார் என்று அறிவதற்கோ எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.எனவே திட்டமிட்டுதான் சிங்கள அரசு இந்தப் படுகொலையைச் செய்கிறது. எதனால் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப் படுகிறார்?

அண்மையில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் அன்று தேவாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருக்கும் போது அங்கேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

அந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் இடத்திற்கு வன்னியசிங்கம் விக்னேஸ்வரனை நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட இருந்தது. அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே அவரைஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்காக ஒழித்திருக் கட்டியிருக்கிறார்கள். திருகோணமலை முழுவதுமே தமிழர் பகுதியிலே அமைந்திருக்கக் கூடிய இயற்கையான துறைமுகம். நீண்ட நெடுங்காலமாக அந்தத் திருகோணமலை துறைமுகத்தின் மீது அமெரிக்கா போன்ற வல்லரவுகளுக்கு ஒரு கண் இருந்து கொண்டே இருக்கிறது.

அமெரிக்காவின் கடற்படையை அங்கே நிறுவத் தொடர்ந்து முயற்சிகள் நடந்தன.

ஒருகாலத்திலே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடற்படைத் தளமாக அது இருந்தது. அவர்கள் ஆண்ட காலத்தில் ஆனால் அதற்கு முன்னால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராசேந்திர சோழனின்-சோழர்காலத்தில் திருகோணமலை கடற்படைத் தளமாக இருந்தது.

நமக்குச் சொந்தமான அந்தத் துறைமுகத்தை ஆக்கிரமிப்பதற்கு அமெரிக்கா விரும்புகிறது. அன்று இந்தியாவின் எதிர்ப்பு இருந்த காரணத்தால் அமெரிக்க கடற்படைத் தளம் அங்கே வரவில்லை.

### சிங்கள அரசு என்ன நினைக்கிறது?

இந்தக் கடற்படைத் தளம் நமக்கு உபயோகபபடாது. இது தமிழர் பகுதியில் இருக் கிறது. ஆகவே இதை அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டால் அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கே வந்து உட்காரும். அதன் பின்னர் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு வசதியாக இருக்கும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டார் கள்.

அன்று ஜெயவர்த்தனா அந்நாட்டின் அதிபராக இருந்தபோது திட்டமிட்டு திருகோணமலைப் பகுதியில் சிங்களவர்களை குடியேற்றினார். அவர்கள் எத்தகைய சிங்களவர்கள் தெரியுமா?

சிங்களச் சிறைகளிலே பெரிய கிரிமினல் குற்றங்களைச் செய்து நீண்டகாலம் சிறைவாசம் விதிக்கப்பட்டவர் களையெல்லாம் விடுதலை செய்து அவர்களுக்கு நிலம் கொடுத்து நிதி கொடுத்து அங்கே குடியேறச் செய்தனர்.

அவர்களைக் கெண்டு ஊர்காவல்படை என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆயுதங் களையும் வழங்கினார்கள். அவர்களுக்கு வேலை என்ன ? அங்கிருக்க கூடிய தமிழர்களை எல்லாம் தாக்கி அங்கிருந்து வெளியியேற்றுவது ஓட ஓட விரட்டுவது என்பது தான்.

இந்த வேலைக்காக சிங்களக் குண்டர்கள் அங்கே குவிக்கப்பட்டார்கள். அது மட்டு மல்ல நண்பர்களே திருகோணமலையில் மூன்றில் ஒரு பகுதியில் இன்று சிங்களவர்கள் குடியேறியிருக்கிறார்கள்.இது திருகோணமலை முழுமையாக சிங்களர்களில் சிக்கினாலும் அமெரிக்ககடற்படைத்தளம் அங்கு அமைந்தாலும் ஈழத்தமிழர்களுக்கு வருகிற அபாயத்தை விட இந்தியாவுக்குப் பேராபாயம் என்பதை டில்லியில் உட்கார்ந்திருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

யாருக்கோ நடக்கிறது? அங்கிருக்கிற ஈழத் தமிழர்களுக்குத்தானே இந்த சங்கடம் என்று எண்ணி டில்லியில் இருப்பவர்கள் பேசாமலிருப்பார்களேயானால் அது இந்தியாவுக்கே ஆபத்தாக முடியும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது 1982ஆம் ஆண்டுநான் இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து விட்டுவந்தேன்.

### யாழ்நூலகம் எரிப்பு

அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே மிகப் பெரிய நூலகத்தை சிங்கள இராணுவம் கொளுத்தியது அது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது மக்களைக் கொல்லலாம் ஆனால் எதற்காக நூல் நிலையத்தைத் திட்ட மிட்டு கொளுத்தினார்கள்? அழித்தார்களா? அதை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக சட்டமன்ற உறுப்பினராக இருந்தநான் இங்கிருந்து இலங்கைக்குப் போனேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் என்னை அழைத்துக் கொண்டுபோய் எரிந்து போன நூல் நிலையத்தைச் சுற்றிக் காட்டினார்.

ஆசியாவில் மிகப் பெரிய நூல் நிலையமாக அது திகழ்ந்தது மறைந்த அறிஞர் ஆனந்தகுமாரசாமி பற்றிஎல்லோருக்கும் தெரியாவிட்டாலும் சிலருக்காவது தெரிந்திருக்க வேண்டும்.

அவர் மிகப் பெரிய அறிஞர் உலகம் முழுமையும் சுற்றியவர் அமெரிக்காவின் அருங்காட்சியகம் ஒன்றுக்கு அதிகாரியாகப் பணியாற்றியவர் அவர் உலகம் முழுவதையும் சென்று சேகரித்து அரிய ஓலைச்சுவடிகள் நூல்களை அந்த நூலகத்திற்கு கொடுத்திருந்தார்.

8 இரும்பு பீரோக்கள் நிறைய அவர் கொடுத்த ஓலைச்சுவடிகளும் நூல்களும் நிறைந்திருந்தன. நான் சென்று பார்த்த போது அவ்வளவும் பொசுங்கி சாம்பலாகிக் கிடந்தது. அவர்களுக்கு தமிழர்களை இனப் படுகொலை செய்வதை விட தமிழ்ப் பண்பாட்டுச்சின்னங்களை அழிப்பதில் வெறி இருந்தது. அதன் விளைவாக அந்த நூலகம் அடியோடு எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இதை ஏன் சொல்லுகிறேன் எனில் அதைப்பற்றி அறிந்துவந்து பிரதமர் இந்திராகாந்திக்கு ஒரு கடிதம் அனுப்பினேன்.

### அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு

திருகோணமலையில் நான் சென்று பார்த்தபோது பெரிய பெரிய கட்டடங்கள் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள் எதற்காக என்பதற்கு எனக்குத் தெரியவில்லை ஆனால் அமெரிக்க கடற்படை வீரர்கள் ஓய்வெடுப் பதற்காக கட்டங்கள் கட்டடப்படுவதாக அந்த மக்கள் சொன்னார்கள் அமெரிக்கா மெதுவாக அங்கே நுழைய முயற்சிக்கிறது எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அதிலே கூறினேன். அப்போது மதிப்பிற்குரிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.அவர்களிடம் இதைப்பற்றி சொன்னேன் கேட்டார்.

இங்கிருந்து ஒரு அனைத்துக்கட்சி தூதுக் குழு டில்லிக்குச் சென்று பிரதமர் இந்திரா காந்தியிடம் இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று நான் சொன்ன போது அதை எம்.ஜி.ஆர் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் அவர் தலைமை யிலேயே ஒரு தூதுக்குழுவாக டில்லி சென்றோம் பிரதமர் இந்திராகாந்தியிடம் அனைத்து விவரங்களையும் தெரிவித்தோம்.

அதிகாரப்பூர்வமாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையெழுத்திட்ட மனு ஒன்று இந்திராவிடம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா காந்தி இந்துமா சமுத்திரத்தின் எந்தப்பகுதியை எந்தவல்லரசு கைப்பற்ற முயற்சிசெய்தாலும் அது இந் தியாவுக்கு விரோதமான செயலாக நாங்கள் எடுத்துக்கொள்வோம் என்று எச்சரித்தார்.

அதற்குப் பின்னால் அம் முயற்சி நின்றது. ஆனால் தற்போது மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறார்கள் அதற்கு சிங்கள அரசு ஒத்துழைக்கிறது நான் நம்முடைய பிரதமர் மன்மோகன்சிங் அவர்களை மிக்க பணிவன் போடுகேட்டுக்கொள்கிறேன். திருகோணமலையில் ஏற்பட்டுள்ள இந்த கலவரம் அதுவும் சமாதான பேச்சுவார்த்தை சர்வதேச சமூகத்தின் உதவியோடு வற்புறுத்தலின் பேரில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைநடைபெறுவதற்கு முன்னால் இப்படி ஒரு கலவரத்தை நடத்துவார்கள் என்று சொன்னால். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட இருந்தவரை சுட்டுக்கொலை செய்வார்கள் என்று சொன்னால் சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தச் சூழலில் எப்படி நடத்த முடியும்?

ஏதாவது ஒரு வேண்டாத சூழ்நிலையை ஏற்படுத்தி விடுதலைப்புலிகள் எப்போதும் இப்படித்தான் அவர்கள் எப்போதும் சமாதானத்துக்கு வரமாட்டார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட திட்டமிட்ட இனப்படுகொலையைத் தொடர முயற்கிச்கிறார்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்தப் பிரச்சினையிலே ஒன்றுபட்டு குரல் கொடுக்கவேண்டும் அவ்வாறு குரல் கொடுத்தால் இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே எந்த அளவு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே இரண்டும் கெட்டான் நிலைப்பாடாக இருக்கிறது அது ஈழத்தமிழர்களுக்கும் உதவாது இந்தியாவுக்கும் உதவாது.

### நோர்வேயின் நேர்மை

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது மூன்று ஆண்டுக்காலத்துக்கும் மேலாக இப்பேச்சுவார்த்தை நடைபெறுகிறது நோர்வே நாட்டு மத்தியஸ்த்துடன் நடக்கிறது.

யார் இந்தப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்கிறார்கள் அந்த நோர்வே நாட்டைச்சேர்ந்த அமைச்சர்கள் இங்கே டெல்லிக்கு வருகிறார்கள் பிரதமரைச் சந்திக்கிறார்கள். வெளிநாட்டு அமைச்சரைச் சந்திக்கிறார்கள் அதிகாரிகளைச் சந்திக்கிறார்கள் இவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கொழும்புக்குப் போகி றார்கள்.

இந்தியாவின் சம்பந்தம் இல்லாமல் நாம் தனியாக இந்தப் பிரச்சினையில் செயற்படக் கூடாது என்று நோர்வே நினைத்து ஒவ் வொரு கட்டத்திலும் என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகிறது? நீங்கள் என்னயோசனை சொல்லுகிறீர்கள்? எனக் கேட்டுத்தான் அவர்கள் செயற்படுகிறார்கள்.

கொழும்பிலிருந்து சிங்கள அரசு தலைவர்கள் சந்திரிகாவாக இருந்தாலும் ரணிலாக இருந்தாலும் ராஜபக்ஷவாக இருந்தாலும் டில்லிக்கு வருகிறார்கள் பிரதம்ரைச் சந்திந்துப் பேசுகிறார்கள் அவர்கள் தரப்பு நியாயத்தைச் சொல்லுகிறார்கள்.

அதுமட்டுல்ல நண்பர்களே இந்தியா இந்த பிரச்சினையிலேயே என்னசெய்திருக்கவேண்டும்? நோர்வே தரப்பு அவர்களது கருத் தைச் சொல்லிவிட்டார்கள் சிங்கள தரப்பு அவர்களது கருத்தைச் சொல்லிவிட்டார்கள்.

இன்னொரு தரப்பு இருக்கிறதே தமிழர் தரப்பு அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டா ? இல்லையா?

சரி விடுதலைப் புலிகளைத்தான் சந்திப்பில் தயக்கம் இருக்கிறது சரி அந்த இயக்கத்துக்குத் தடை விதித்து இருக்கிறீர்கள் எப்படி அழைத்துப் பேசலாம் என்று ஒரு சாக்கு சொல்லலாம். அது கூட உண்மை அல்ல.

நாகாலாந்திரும் கஸ்மீரிலும் இந்திய அரசு தடை செய்த இயக்கங்களின் தலைவர்களை இந்திய இராணுவ விமானங்களிலே அழைத்துக் கொண்டு வந்து அவர் கள் சுவிட்சர்லாந்துக்கோ, ஜப்பானுக்கோ உங்கள் விமானத்திலே அழைத்துச்சென்று இந்தியப் பிரதமராக வாஜ்பாய் இருந்த போது நீங்கள் பேசவில்லையா?

இந்தியாவுக்குள்ளேயே அவர்களை அழைத்துப் பேசவில்லையா? இதே மன்மோகன் சிங் பேசவில்லையா?

### மாற்றாந்தாய் மனப்பாங்கு எதற்கு

ஏன் இவர்கள் விடயத்தில் மட்டும் மாற்றாந் தாய் மனப்பான்மையோடு செயற்படுகிறீர்கள்? சரி விடுதலைப்புலிகளுடன் நீங்கள் பேசுவதில் உங்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கின்றன ஆனால் இலங்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் 20 பேருக்கும் மேல் இருக்கிறார்கள்.

அவர்கள் கடந்த இரண்டாண்டு காலத்துக்கு மேலாக இந்தியாவின் பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்கிறார்கள் கடிதம் எழுதுகிறார்கள்.

இங்கையில் உள்ள இந்தியத் தூது வரைச் சந்தித்து முறையிடுகிறார்கள் இந்தி யாவின் பிரதமரைச் சந்திக்க வேண்டும் மற்ற தலைவர்களையெல்லாம் சந்திக்க வேண் டும் எங்களுக்கு நேரம் ஒதுக்கிக்கொடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள் ஆனால் 2 ஆண்டுகளாக அவர்களுக்கு எந்தப் பதிலை யும்வழங்காது நீங்கள் மௌனமாக இருப்பது ஏன்?


சிங்களத் தரப்பு யார் வந்தாலும் பேசுகிறீர்கள். அண்மையிலே சிங்கள அதிபராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜபக்ஷ முதன் முதலாக இந்தியாவுக்கு வந்தார். 30க்கும் மேற்பட்ட பெரிய குழுவுடன் வந்தார்.

அந்தக் குழுவில் இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகிற ஜே.வி.பி.இயக்கத்தைச் நேர்ந்தவரும் அந்தக்குழுவிலே வந்தார். அதாவது 30 பேரில் அவரும் ஒருவர். (8 பக்கம் பார்க்க)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## பேராசை பெரும் நஷ்டம்

ரோமானியர்களின் கடல் தெய்வமான நெப்ரியூன் பற்றி ஏராளமான கதைகள் கூறப் படுவதுண்டு. ஏனென்றால்



நெப்ரியூனை அவர்கள் கருணை தெய்வமாகப் போற்றுகிறார் கள். அதில் ஒரு கதைதான் இங்கே...

ஒருநாள் கடற்கரையோ ரம் சென்ற ஒரு பெண் அங் கிருந்த பாறையின் மீது ஏறி நெப்ரியூனைப் புகழ்ந்து பாட ஆரம்பித்தாள். பல மணி நேரத்திற்குப் பின் அங்கே நெப்ரியூன் தோன்றினார்.

''உனக்கு என்ன வேண்டும் கேள்'' என்றார்.

''எனக்கு ஒரு பசுமாடு வேண் டும்'' என்றாள் அந்தப் பெண்.

அடுத்த நிமிடம் அங்கே ஒரு பசுமாடு வந்தது. அதைப் பார்த்து அந்தப் பெண் ஆச்சரிய மடைந்தாள். இன்னொரு பசு வேண்டும் என்பதற்காக மீண் டும் பாட ஆரம்பித்தாள்.

அவள் பாடி முடித்தபோது அங்கே இன்னொரு பசு இருந் தது. அந்தப் பெண்ணுக்கு ஆச் சரியம் தாங்க முடியவில்லை.

தொடர்ந்து பாடினால் இன் னும் நிறையப் பசுக்கள் கிடைக் கும் என்று நினைத்து தொடர் ந்து பாடிக்கொண்டே இருந் தாள். நெப்ரியூன் தெய்வமும் அவளது ஒவ்வொரு பாடலுக் கும் ஒரு பசுவை பரிசாகத் தந்து கொண்டே இருந்தது.

அந்தக் கடற்கரையில் நிற்க முடியாத அளவிற்கு பசுக்கள் கிடைத்தும் அந்தப் பெண்ணுக்கு ஆசை தீரவில்லை.


அவளது காலுக்கு அடியில் ஒரு சிறிய பாறை இருந்தது. அங்கே ஒரு பசு நிற்கும் அள விற்கு இடம். அதனால் தனது பலம் கொண்ட மட்டும் பாடி நெப்ரியூனை வரவழைத்து கடைசியாக ஒரு பசுவைப் பெற்று விடுவது என்று நினைத்துப் பாடினாள்.

கடலுக்குள் இருந்த நெப்ரி யூன் மேலே வந்து தனது பக் தைக்கு ஆசீர்வாதம் செய்ய எழுந்தது. அப்போது அங்கிரு ந்த பாறையின் மீது நெப்ரியூ னின் தலை பலமாக இடித்தது. இதனால் கோபமடைந்த நெப் ரியூன் தான் பரிசளித்த அத் தனை பசுக்களையும் தன் வசம் எடுத்துக்கொண்டு கடலுக்குள் போய் விட்டார்.

என்ன சிறுவர்களே!

பேராசை பெரு நஷ்டம் என் பதைப் புரிந்துகொண்டீர்களா?

## ஜான் ஜேம்ஸ் ஆடுபான்



பறவைகள் குறித்து பல நுணுக்கமான ஆராய்ச்சிகளை நடத்தி யாரும் இதுவரை கண்டி ராத பல உண்மைகளைச் சொன் னவர் அமெரிக்க நாட்டு அறிவி யல் அறிஞரான ஜான் ஜேம்ஸ் ஆடுபான் என்பவர்.

இவர் ஹைட்டி என்ற பகுதி யில் உள்ள லெ தேய்ஸ் என்னு மிடத்தில் 1785ஆம் ஆண்டில் பிறந்தார்.

குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்த இவர் தந்தையுடன் பிரான்ஸ் நாடு சென்றார்.

மகனை ஒரு படை வீரனாக்க வேண்டுமென்று தந்தை விரும் பினார்.

ஆடுபானுக்கு அதில் உற்சாகமில்லை என்று கண்டதும் அவர் தந்தை அமெரிக்காவில் பிலடெல்பியா என்ற இடத்தி லிருந்த தமது நிலபுலன்களைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி மகனை அனுப்பினார்.

ஆடுபானுக்கு நிலபுலன்களைக் கவனிக்கும் விஷயத்தில் அக்கறையில்லை. அங்கு சந்தித்த லூயி பிளாக்வெல் என்ற அழகிய பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண் டார்.

தந்தையாரின் நிலபுலன்களை எல்லாம் விற்று விட்டு அந் தப் பணத்தை வைத்துக்கொண்டு உல்லாச வாழ்வு வாழ்ந் தார்.


பணம் முழுவதும் செலவான பிறகு வறுமை அவரை வாட் டிற்று. வயிற்றுப் பிழைப்புக்காக அவ்வப்போது சிறு சிறு வேலை களைச் செய்தார். அவர் மனம் பறவைகள் பற்றிய ஆராய்ச்சி யில் நாட்டம் கொண்டது. பறவைகளைப் பற்றித் தாம் கண்டறிந்த விஷயங்களைத் தொகுத்துப் பெரிய நூலாக எழுதினார். பல தொகுதிகளாக இருந்த அந்த நூலை அமெரிக்கப் புத்தக வெளி யீட்டாளர் யாரும் வெளியிட முன்வரவில்லை.

இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து சில வெளியீட்டாளர்கள் ஆடுபானின் நூல்களை வெளியிட்டனர். மக்கள் மத்தியிலும் அறிவியல் ஆராய்ச்சியாளர் மத்தியிலும் அந்த நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. தமது அறுப தாவது வயதில் ஆடுபான் காலமானபோது அவர் உலகப் பிர சித்தி பெற்ற பறவையியல் ஆராய்ச்சியாளர் என்ற புகழைப் பெற்றிருந்தார். இதுவரை யாருமே கண்டிராத பல நுணுக்க மான உண்மைகளை இவர் புத்தகம் சொல்லியது குறிப்பிடத் தக்கது.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



## லொள்... லொள்... பறவை!




பறவை என்றால் அது 'கீச் கீச்' என்று சத்தம் போடும். அல்லது கத்தும். ஆனால் நாய் மாதிரி குரைக் குமா...? அப்படியொரு பறவையும் இருக்கிறது. அந்தப் பறவையின் பெயர் ஆன்ட்பீட்டா. வாத்து இனத் தைச் சேர்ந்த இந்தப் பறவை நாய் மாதிரி குரைக் கிறது. இதில் ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் 1998 ஆம் ஆண்டுதான் இந்தப் பறவை இருப்பதே கண்டுபிடிக்கப்பட்டது.

பறவையின ஆராய்ச்சியாளர் ராபர்ட் எஸ்.ரிக்லே, ஈகுவடோர் நாட்டின் அந்தீஸ் மலைத்தொடரில் இந்தப் பறவை இருப்பதைக் கண்டறிந்தார். இப்போது இந்த இனப் பறவைகள் மொத்தம் 30 இருக்கின்றன.

குரைப்பது எனும் போது இன்னொரு விஷயமும் உண்டு. நாய்கள் குரைக்கும் என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால் குரைக்காத நாய்களும் இருக்கின்றன. பாசென்ஜி, ஸ்மாலிஷ் இன நாய்கள் குரைப்ப தில்லை. இதேபோல் ஆபிரிக்கா கண்டத்தில் காணப்படும் காட்டு நாய் களும் குரைப்பதில்லை.

## பொது அறிவு

1.பூமியில் கிடைக்கும் பொருட்களில் மிகவும் கடினமானது எது?
2.பக்டீரியாவைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு?
3.உட்கருவைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு?
4.புரோட்டோ பிளாசத்தைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு?
5.வளிமண்டலத்தில் உள்ள தூசுகள் சூரியனிடமிருந்து வரும் ஒளியின் எத்தனை சதவீதத்தை சிதறடிக்கின்றன?
6.பூமி எத்தனை ஆண்டுகளுக்கு முன் தோன்றியது?
7. ஆங்கில உயிரெழுத்துக்கள் வரிசையாக அமைந்த சொல் எது?
8.வட அமெரிக்காவில் புயல் காற்று எப்படி அழைக்கப்படுகிறது?
9.உலகிலேயே பெரிய தீவு எது?
10.உலகிலேயே மிகப் பெரிய துறைமுகம் எது?

## மீண்டும்... மீண்டும்...



சுறா மீன்களுக்கு அதன் ஆயுட்காலம் முழுவதற்கும் பற்கள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன.

ஒரு சுறா மீனுக்கு அதன் ஆயுட் காலத்தில் 20 ஆயிரம் பற்கள் முளைத்து விடுகின்றன. ஒரு பல் விழுந்தால் அந்த இடத்தில் இன்னொரு பல் உடனடியாக முளைத்து விடுவதே இதற்குக் காரண மாகும்.

இரையைக் கைப்பற்றும் சுறா மீன்கள் முதல் கீழ்தாடை பற்களைக் கொண்டே இரையைக் கடிக்க ஆரம் பிக்கும். பின்னர் அப்படியே மேல் தாடைக்கு அந்த இரையை தூக்கி வீசும். இப்படியே மேலும் கீழும் தூக்கி வீசித்தான் இரையை அது தின்னுகிறது. எத்தனை பெரிய இரையாக இருந்தாலும் அதை 10 நிமிடத்துக்குள் மென்று விழுங்கி விடும். அத்தனை கூர்மையானது அதன் பற்கள்.

## விடைகள்

### கண்டுபிடியுங்கள்

1.கடிதம் 2.தபால் பெட்டி
3.கடிகாரம் 4.தோள்பை
5.குடை 6.காலணி
7.சட்டைப் பை

### பொது அறிவு

1.வைரம்
2.ஆண்டன்வான் லூவன்ஹூக் - 1675
3.ராபர்ட் பிரௌன் - 1871
4.பர்க்கின்சி மற்றும் மோல் - 1840
5.7 சதம்
6. 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்.
7.DAEIOU
8.ஹரிக்கேன்.
9.கிரீன்லாந்து
10.நியூயோர்க் துறைமுகம்

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## ③ பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்

**பாலியப் போராளிகள்**

**கொள்கைகள்:**

*இலங்கையின் சிறுவர் சாசனத்தின்படியும் பிள்ளையின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் விருப்பத் தேர்வான உடன்படிக்கையின் படியும் 18 வயதை அடையாத பிள்ளை போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபெறலாகாது.

*பதினெட்டுவயதைஅடையாத பிள்ளை



ஆயுதப் படையிற் சேர்த்துக் கொள்ளப் படலாகாது.

**செம்மையான நடைமுறைகள்**

1.இலங்கையில் ஆயுதப் படைக்கூறு அல்லது போரணியில் சேர்த்துக்கொள்ளுதற்குரிய குறைந்தபட்ச வயதெல்லை பதினெட்டாக இருக்கவேண்டுமென்ற விதியைக் கடைப்பிடிக்குமாறு படை திரட்டுவதில் ஈடுபட்டிருப்போருக்கும் பொதுமக்களுக்கும் வலியுறுத்தவும்.

2. போராளி ஒருவர் இந்த வயதெல்லைக்குக் குறைந்தவரெனச் சந்தேகிக்கும் பட்சத்தில் அதிகாரிகளும் மனித மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான அதிகாரம் பெற்றவர்களும் சட்டப்படி விசாரணை செய்ய அனுமதிக்கவும்.

3.போராளிகளாகப் பங்கு கொண்டமையினால் மனவதிர்ச்சியும் அச்சமும் அடைந்துள்ள பிள்ளைகளை இனங்கண்டு ஆதரவளித்து உரிய இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கேற்ற நடைமுறைகளையும் ஆற்றல்களையும் உள்ளூரிற் புலம்பெயர்ந்தோருக்கான நிலையங்கள் முதலியவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் கற்கவகை செய்யவும்.

4.முன்னைய பாலியப் போராளிகள் தம் குடும்பத்தவருடன் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கும் கூடிய விரைவில் மீண்டும் பாடசாலை செல்லச் செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கவும்.

5.முன்னைய பாலியப் போராளிகளின் குடும்பத்தவர்களுக்கு உபகரணங்கள், விதைகள், பாத்திரங்கள், பாடசாலைச் சீருடைகள் துணிமணி ஆகியன அடங்கிய 'சமாதான வெகுமதிப் பொட்டலம் பிள்ளையின் சேமநலனுக்கும் சமுதாயத்தில் மீண்டும், இணைந்து கொள்வதற்கும் வசதி செய்யும் வகையில் கொடுக்கப்படல் வேண்டும்.

6.பிணக்கைத் தீர்ப்பது தொடர்பான எந்த முடிவிலும் பாலியப் போராளிகள் போரணியிலிருந்து விடுவிக்கப்பட்டு சமுதாயத்தில் புனர்வாழ்வு பெறுவதற்கான நடவடிக்கைகள் திட்டவட்டமாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தவும்.

**பாலியல் துர்ச்செயல்களுக்கும் பெண்மை சார்ந்த வன்செயல்களுக்கும் உள்ளாகுவோரின் பாதுகாப்பும் ஆரோக்கியமும்**

**கொள்கைகள்:**

*பிணக்கு நடைபெறும் காலத்திற்கூட பாலியல் துர்நடத்தைகளிலும் வன்செயல்களிலும் ஈடுபடுவோர் சட்டத்தின் முழு அதிகாரத்துக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

*பாலியல் துர்நடத்தைக்கும் வன்செயல்களுக்கும் உள்ளானவர்கள் யார் எவர் என்று தெரியாதவாறு அந்தரங்கம் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் உள்ளத்தாலும் உடலாலும் அவர்கள் ஆரோக்கியமடைவதற்கும் உதவியளித்தலும் வேண்டும்.

*பாலியல் துர்நடத்தை வன்செயல்கள் ஆகியன தொடர்பான ஆபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**செம்மையான நடைமுறைகள்**

1.நிவாரண மற்றும் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களில் கர்ப்பிணிகள், பெண்கள் ஆகியோரின் வம்ச விருத்தி சார்ந்த ஆரோக்கியம், உளவியல் மற்றும் சமூகச் சார்பான தேவைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல்.

2.முகாம்களிலும் சேமநல நிலையங்களிலும் ஆபத்துக்குள்ளாகக்கூடிய பெண்கள் சிறுமிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

3.பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிப்பதற்கான ஏற்பாடுகளை அமைத்தல். இதிலே ஆலோசனை வழங்கல் ஏனைய உளவியல் மற்றும் சமூகவியல் சேவைகளும் அடங்கவேண்டும்.

4.சம்பவங்களை அறிவிப்பதற்கெனத் திட்டவட்டமான ஏற்பாடுகளை அமைத்தல். தகுந்த சட்ட நடவடிக்கைகள், புனர்வாழ்வுப் பணிகள் என்பனவும் இவற்றில் அடங்க வேண்டும்.

5.ஆயுதப் ப...யினர். அரசாங்க ஆளணியினர், பொதுமக்கள் அனைவருக்கும் பாலியல் துர்ச்செயல்கள் மற்றும் பெண்மை சார்ந்த வன்செயல்களைத் தடுத்தல், அவற்றைச் சமாளித்தல் என்பன தொடர்பாகப் பயிற்சியளித்தல்.


**மிதிவெடிகள்**

**கொள்கைகள்:**

*இலங்கையில் பிணக்கில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரும் மக்களுக்கு யமனாகவுள்ள கண்ணிவெடிகளை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் படி ஒழுகுதலே இறுதி இலட்சியமாக வுள்ளது.

*அதேசமயத்தில் பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் எதிர்காலத்தில் எந்தக் கட்டத்திலேனும் பிள்ளைகளும் பலவீனமான மக்கள் குழுக்களும் அடிக்கடி போய் வரக்கூடிய இடங்களில் மிதிவெடிகளைப் பொறிவைப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

**செம்மையான நடைமுறைகள்**



1.கண்ணிவெடிகள் புதைத்த இடங்களைத் தெளிவாகக் குறிப் பிடல்.

2.குடிமக்கள் புழங்கும் இடங்களிலிருந்து கண்ணி வெடிகளை அகற்றுதல்.

3.கண்ணிவெடிகள் பற்றி அறிவூட்டும் பிரசார இயக்கங்களை விசேடமாகப் பெண்களையும் பிள்ளைகளையும் குறிவைத்து மேற்கொள்ளுதல.

4.கண்ணிவெடிகளுக்கு இலக்கான பிள்ளைகள் உடலாலும் உள்ளத்தாலும் குணமடைவதற்கென சமுதாயத்தைத் தளமாகக் கொண்ட புனர்வாழ்வுப் பணியை ஆதரித்தல்.

5.முழுமையான தடைக்கு உடன்பாடு காணும்வரை இடைக்கால நடவடிக்கையாக பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், கிணறுகள் மற்றும் சனசமூக நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளைச் சூழ கண்ணிவெடிகளைப் பொறிவைக்காது பாதுகாத்தல் வேண்டுமென வலியுறுத்தல்.

6.இலங்கையில் கண்ணிவெடிகள் உபயோகிப்பதை முற்றாக நிறுத்துமாறு பிரசாரஞ்செய்தல்.

(தொடரும்...)





வெற்றிலைக்கேணி ஆர்.சி.ரி.எம்.எஸ். மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின் போது....

(படங்கள்: விஷ்ணு, சிவா)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய-தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை யாழ்ப்பாணம்**

## இன்று ஒரு தகவல்

# கண்ணாடி தேவை இல்லை

ஒரு நண்பரைத் தேடிக் கொண்டு போனேன் அவரைப் பார்த்து ரெம்ப நாளாச்சு அதனாலே அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வரலாமென்று நினைத்துக்கொண்டு போனேன். நான் போகும் பொழுது அவர் வீட்டு வாசலிலே நின்று கொண்டிருந்தார். தூரத்திலே நான் அவரைப் பார்த்துவிட்டேன் இரண்டு கைகளையும் தூக்கி வணக்கம் என்று சொல்லிக்கொண்டே அவரை நெருங்கினேன். அவர் அதைக் கண்டு கொள்ளவேயில்லை அவர் பாட்டுக்கு நின்று கொண்டேயிருந்தார்.

நான் கிட்ட நெருங்கியதும் உற்றுப் பார்த்துவிட்டு அடடா நீங்கள்...மன்னிக்கவேண்டும் எட்டத்திலே வரும் போது உங்க முகம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை என்றார்.

இந்த அனுபவம் பல பேருக்கு ஏற்பட்டிருக்கலாம் இதற்கு என்ன காரணம்? மையோப்பியா (**Myopia**) அதாவது கிட்டப் பார்வைக் கோளாறு.

கிட்டப்பார்வைக் கோளாறு என்றால் கிட்டத்திலே உள்ளது நன்றாகத் தெரியும் தூரத்திலே உள்ளது நல்லாய் தெரியாது ஒரு பொம்மையைப் பார்க்கிறோம் அதிலே இருந்து வருகிற ஒளிக்கதிர்கள் தமது கண்வழியாக உள்ளே போய் கண்ணுக்கு மேலே முன்புறம் உள்ளது விழி வெண்படலம் (**Cormea**) அது வழியாக உள்ளே போய் அங்கேயுள்ள திரையில் விழுகிறது அந்தத்திரைக்குப் பெயர் ரெட்டினா (**Retina**) விழித்திரை.

பிம்பம் திரையிலே சரியாக விழுந்தால் பார்வை நன்றாக இருக்குமென்று அர்த்தம் நாம் பார்ப்பது எல்லாம் பளிச் என்று தெரியும் கிட்டப் பார்வைக் கோளாறு உள்ளவர்களுக்கு இந்தப் பிம்பம் திரையிலே விழுவதற்குப் பதிலாக அதற்குக் கொஞ்சம் முன்னாடியே விழுந்து விடும் அதனாலே பார்க்கிற பொருள் தெளிவாகத்தெரியாது.

இதைச் சரி செய்வதற்கு இது வரைக்கும் என்ன செய்து கொண்டிருந்தோம்? கண்ணாடி (**Spretaele**) மாட்டிக்கொள்வோம் இல்லாவிட்டால் கள்டேக் வென்ஸ் பொருத்திக்கொள்வோம். அதாவது ஒட்டுக்கண்ணாடி வில்லை.

இப்பொழுது கண்ணாடி தேவையில்லாமலே பார்வையைச் சரி செய்வதற்கு ஒரு வசதி வந்திருக்கிறது.

அது தான் எக்சைமர்லேசர் விழி வெண்படல ஒளிக்கதிர் இதனால் அறுவை சிகிச்சை (**Exeimer laer phofo Refractive Keratectomy prk** இது எப்படியென்றால் விழி வெண்படலத்திலே நடுப் பகுதியிலே மேலெழுந்த வாரியான 10 முதல் 20 சதவீதம் வரை தடிப்பை நீக்கி விடுகிறது.

இன்னொரு முறை என்னவென்றால் விழிவெண்படல ஆர அறுவை சிகிச்சை **Radial Kerafectomy** விழி வெண்படலத்தின் தடிமனான மேற்பகுதியை 95 முதல் 99 சதவீதம் வரை 4 முதல் 6ஆரங்களாக வெட்டிச் செலுத்தி நடுப்பகுதியை சமப்படுத்துகிற அறுவைச் சிகிச்சை இது.

ஒளிக்கதிா சிதறல் அறுவை சிகிச்சை பதினைந்து நிமிடத்திலே முடிந்து விடும் ஆஸ்பத்திரியிலே தங்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லை அன்றைக்கு வீட்டுக்குப் போய்விடலாம்.

நமக்கு அறுவை சிகிச்சை நடக்கிறபோது நாங்கள் விழித்துக்கொண்டேயிருக்கலாம் வலி இருக்காது கண்ணுக்கு மட்டும் தற்காலிகமாக மரத்துப் போவதற்கு மருந்து கொடுத்து விடுவார்கள் லேசர் கருவியை மேல் நோக்கிப் பார்க்கிற மாதிரி நாங்கள் படுத்துக்கொள்ளவேண்டும் டாக்டர் என்ன செய்வாரென்றால் நமக்குத் தேவையான ஒளிவிலக்கல் திருத்தத்தை (**Refractive correclrom**) லேசர் கருவியின் கம்பியூட்டரிலே பதிவு பண்ணி விடுவார். கண் இமைக்காமல் இருப்பதற்கு ஸ்பெகுலம் என்கிற கிளிப்பைப் பொருத்தி விடுவார் அதன்பின் ரெம்ப லேசா விழி வெண் விழிப் படத்தின் மேல் இழை திசுக்களை (**Epirhelium**) நீக்கி விடுவார்.

அதற்கு அப்புறம் கண்ணுக்கு ஒரு கட்டு அவ்வளவு தான் வேலை அப்புறம் வீட்டுக்கு வந்து விடலாம். இது தான் **PRK** சிகிச்சை அதாவது ஒளிக்கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை.

விஞ்ஞானம் வளர்கிற வேகத்தைப் பார்த்தீர்களா? இனிமேல் சத்திர சிகிச்சைக்கும் (ஆபரேஷன்) கத்திக்கும் சம்பந்தமேயில்லை அதனாலே அறுவை சிகிச்சை என்பதற்கு வேறு வார்த்தையைக் கண்டு பிடிக்கவேண்டும் ஏனென்றால் இச்சிகிச்சையிலே அறுவையே இல்லையே!கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் என்பது மாதிரி கத்தியின்றி ரத்தமின்றி ஆபரேஷன்!

அதனாலே இனிமேல் ஆபரேஷனென்றால் யாருமே பயப்பட வேண்டாம் ஒரு நோயாளி அப்படித்தான் ஆஸ்பத்தியிலேயிருந்து தப்பிச்சு வெளியே ஓடி வந்தனர். வாசலிலே இருந்தவர் ஏன்யா இப்படி பயந்துகிட்டு ஓடி வாறே என்று கேட்டார்.

எனக்கு இன்றைக்கு ஆபரேஷன் அது தான் பயந்துகிட்டு ஓடி வர்றேன் என்றான் அந்த ஆள்.

அதிலே என்ன பயம் ? இபபோதெல்லாம் சுலபம் என்றார் இவர்நான் ஆபரேஷனுக்காக பயப்படாமே துணிச் சலாகத்தான் இருந்தேன் நர்ஸ் அம்மா சொன்னதைக் கேட்டதும் தான் பயம் வந்து விட்டது என்றான் ஓடிவந்த நோயாளி.

"என்ன சொன்னாங்க நர்ஸ் அம்மா என்று கேட்டார் அவர் இது ஒரு சின்ன ஆரேஷன் தான் பயப்படாதீங்க தைரியமாய் இருங்க என்று சொன்னாங்க நர்ஸ் அம்மா, என்றான் அந்த ஆள்.

அப்படிச் சொன்னதற்கு அப்புறமும் உனக்கு என்ன பயம் என்று கேட்டார் அவர்.

அய்யோ அந்த நர்ஸ் அம்மா அப்படிச் சொன்னது என்கிட்ட இல்லீங்க... ஆபரேஷன் செய்யப் போகிற டாக்டர் கிட்ட என றான் அந்த ஆள்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# பேச்சுவார்த்தை தடைப்பட்டால் அதற்கான பொறுப்பை புலிகளே ஏற்கவேண்டும்!

## என்கிறார் பாலித கோகன

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டவாது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாமல் சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்பட்டு போகுமாயின் அதனை தமிழீழ விடுதலைப்புலிகளே பொறுப்பேற்க வேண்டுமென அரசாங்கம் சமாதான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் தலைவர் கலாநிதி பாலித கோகன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் தமது கிழக்கு மாகாண தலைவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு அரசாங்கத்திடம் கேட்டிருந்தது.

இதற்கமைவாக கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கடல் மார்க்கமாக வன்னிக்குச் செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து கொடுத்தது.

அத்துடன் அரசாங்கம் கடற்படைப்படகு ஒன்றையும் வழங்கியிருந்தது. இந்தப்படகில் பயணம்மேற்கொள்ளும் போது விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கொண்டு செல்ல முடியாது எனவும் விடுதலைப் புலிகளின் படகுகள் கடற் படைப்படகுகளுடன்சேர்ந்தே செல்ல வேண்டுமெனவும் இரு நிபந்தனைகளை அரசாங்கம் விதித்திருந்தது.

இந்த நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் முதலில் ஏற்றிருந்தார்கள் பின்னர் நிராகரித்துவிட்டார்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்த தகவலில் அரசாங்கத்தின் நிபந்தனைகளை ஏற்க முடியதெனக் கூறியிருந்தார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு நேரத்திற்கும் ஒவ்வொரு விதமாக கதைக்கும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வார்களா? இல்லையா? என் பதை உறுதியாக க் கூறமுடியாது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராகவே இருக்கிறது. ஆனால் விடுதலைப் புலிகள் தான் என்ன நிலைப்பாட்டில்இருக்கின்றார்கள் எனத் தெரிய வில்லை என் றார் பாலித கோகன. (கு-5)

# திருமணைவ படுகொலை.....

(.5ஆம் பக்க தொடர்ச்சி)

இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவதுஇந்தியப் பிராந்தியத்திலே வல்லாதிக்கப் போக்கிலே நடக்கிறது என்று இந்தியாவை எதிர்க்கிறவர் இங்கே வந்திருக்கிறார். அவரையும் நம்முடைய பிரதமரும் மற்றவரும் சந்தித்துப் பேசுகிறீர்கள். சரி, அந்த நாட்டின் குடியரசுத் தலைவர் அந்த நாட்டுக் குழுவிலே அவரை சேர்த்துக் கொண்டு வரும்போது நீங்கள் தடுக்கமுடியாது. ஆனால் சிங்களத் தரப்பு நியாயத்தைக் கேட்ட நீங்கள் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஆயுதம் தாங்கிய போராளிகள் அல்ல. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள்-மக்களிடத்திலே வாக்கு பெற்று அந்த நாட்டு நாடாளுமன் றத்தின் உறுப்பினர்களா கியிருப்பவர்கள் அவர்கள்உங்களை சந்திப்பதற்கு இரண்டாண்டு காலம் முயற்சி செய்கிறார்கள். நீங்கள் எந்த அனுமதியும் கொடுக்க மறுக்கிறீர்களே? அப்படியா னால் நீங்கள் நடு நிலையோடு செயற்படுவதாக எப்படி நாங்கள் நம்பமுடியும்?அதுமட்டுமல்ல. சார்க் நாடுகள் - தென்னாசிய நாடுகளைச் சோந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் யாராக இருந்தாலும் இந்த சார்க் நாடுகளுக்குள்ளேயே சுற்றுப் பயணம் செய்வதற்கு விசா தேவையில்லைஎன்றுமுடிவுசெய்திருக்கிறார்கள். இன்று வரைக்கும் அம்முடிவு அமுலில் உள்ளது. ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

### ஈழவேந்தன் எம்.பியை திருப்பி அனுப்பியது ஏன்?

அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய நண்பர் ஈழவேந்தன் இந்தியாவுக்கு வந்த போது, பெங்களூரிலே நாங்கள் உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டை நடத்தியபோது அதில் பங்குபெறுவதற்காக வந்தபோது சென்னை விமான நிலையத்திலேயே அவரை மடக்கி திருப்பி அனுப்பினீர்களே?

என்ன நியாயம் இது?

எதற்காக அப்படிச் செய்தீர்கள்?ஏதாவது ஒரு நியாயமான காரணத்தைச் சொல்ல முடிந்ததா? சார்க் நாடுகளின் முடிவையும் மீறி இங்கே இருக்கிற உளவுத் துறை அதிகாரிகள் எதைவேண்டுமானாலும் செய்வார்கள் என்றால் டெல்லியிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் எதற்காக அந்தப் பதவிகளிலே ஒட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்? ஒரு தமிழன் -ஒரு தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர் அவர் இங்கே உள்ள தமிழர்கள் நடத் துகிற ஒரு மாநாட்டுக்கு வரும்போது அவரை திருப்பி அனுப்புகிறீர்கள் என்று சொன்னால் என்ன காரணம்?

பக்கத்திலே ஆந்திரா இருக்கிறது. ஆந்திராவின் தலை நகர் ஐதராபாத்திலே உலகத் தெலுங்கு மாநாடு நடத்தினார்கள். தென்னாபிரிக்கா உட்பட உகலகம் முழுவதிலிருந்தும் தெலுங்கு பேசும் மக்களின் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்துகொள்ள வந்தார்கள். யாரையாவது திருப்பி அனுப்பினீர்களா நீங்கள்? பஞ்சாப்பிலே உலக பஞ்சாபி மாநாடு நடைபெற்றது. இத்தனைக்கும் பஞ்சாப் ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிற மாநிலம்.அமெரிக்காவிலே, கனடாவிலே, ஐரோப்பாவிலே , ஆசிய நாடுகளிலே உள்ள சீக்கியர்களின் பிரதிநிதிகள் எல்லாம் அம்மாநாட்டிற்கு வந்தார்கள். யாரையாவது நீங்கள் திருப்பி அனுப்பியது உண்டா?

பக்கத்தில் பெங்களூரில் உலக கன்னட மாநாடு நடத்தினார்கள். உலகம் முழுவதும் எந்த நாட்டில் வசித்தாலும் கன்னட மொழி பேசுகிறவர்கள் வந்தார்கள். இந்தியாவின் பிரதமரும் போனார். அவர்களில் யாரையாவது ஒருவரை நீங்கள் திருப்பி அனுப்பியது உண்டா? இப்படி வரிசயையாகச் சொல்லிக் கொண்டு போகலாம். அப்படி யென்றால் இந்தியாவில் வாழக்கூடிய பிறமொழியினருக்கு-பிற தேசிய இனங்களுக்கு வழங்கப்படுகிற உரிமைகள் என தமிழனுக்கு மட்டும் மறுக்கப்படுகிறது? அப்படியென்றால் தமிழர்கள் இந்தியாவின் இரண்டாம்தர குடிமக்களா? இரண்டாம் தர குடிமக் களா நாங்கள்? எங்களின் இரத்தத்தின் இரத்தங்கள்-உறவினர்கள்-வெவ்வேறு நாடுகளில் வாழ்கிறவர்கள் இங்கே உள்ளவர்களைச் சந்திக்க வருவது என்றால் உங்களுக்கு ஏன் கசக்கிறது?

இந்தியா ஒரு நாடு என்று எப்படி எங்களால் ஏற்றுக் கொள்ள முடியும்? இது தான் தேசிய ஒருமைப் பாடா? பக்கத்திலே கர்நாடகத்திலே நடிகர் ராஜ்குமார் இறந்து போனார். வருத்தத்திற்குரிய ஒன்று. அவர் இறந்து போனதற்கும் அங்கே வாழும் தமிழர்கள் தாக்கப்படுவதற்கும் ஏதாவது தொடர்பிருக்கிறதா? அன்று நானும் நண்பர் கொளத்தூர் மணியும், கல்யாணியும், நக்கீரன், கோபாலும், சுகுமாரும், போயிருக்காவிட்டால்... இந்த தமிழர்களுக்கு என்றுதானே ராஜ்கு மார் உயிரை மீட்டுக் கொண்டு வந்தோம். அதற்கு நீங்கள் செலுத்துகிற நன்றிக் கடன் இதுதானா? என்ன நியாயம் இது? இந்திய அரசாங்கத்தில் இருக்கிறவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கோவாவில் பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு மொழிக் கலவரம் நடந்தது. கொங்கணி பேசுகிற மக்களுக்கும் மராட்டிய மற்றும் கன்னட மொழி பேசுகிற மக்களுக்கும் அங்கே மோதல் வந்தது. அம் மோதலில் கன்னட மொழிபேசியவர்கள்பெருமளவில்பாதிக்கப் பட்டனர்.

அப்போது கர்நாடகத்தின் முதல்வராக இருந்த குண்டுராவ், பிரதமர் இந்திராகாந்திக்கு அன்று என்ன சொன்னார் ? நீங்கள் உடனடியாக இராணுவத்தை அனுப்பி பாதுகாக்காவிட்டால்-நான் என் காவல்துறையை அனுப்புவேன் என்றார். பதறிப்போன இந்திராகாந்தி அடுத்தநாள் இராணுவத்தை அங்கே அனுப்பினார். கலவரம் ஒடுக்கப்பட்டது. இன்று பெங்களூரிலே தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் -திருமலையிலே நம்முடைய தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் ஏன் என்று கேட்க வேண்டிய இந்திய அரசு வாளாதிருக்கிறது என்று சொன்னால் அதை எத்தனை நாள் நம்முடைய தமிழ்ச் சமுதாயம் சகித்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்கிறேன். இதையெல்லாம் நாங்கள் கேட்டால் உனக்கு வாய்ப் பூட்டு என்று சொல்கிறீர்கள். சரி, வாய்ப்பூட்டு போடுங்கள் என்று வாய்ப்பூட்டுத் திறக்கப்படுகிறதோ அன்றும் இதையேதான் பேசுவோம். அதனால் நாங்கள் ஓய்ந்துவிடுவோம் என்று நினைப்பீர்களானால் நீங்கள் ஏமாளிகளாவீர்கள். ஓவியர் புகழேந்தி தனது நூலில் தமிழீழப் பகுதிகளில் அம் மக் கள் படுகின்ற துயரங்களைப் பதிவு செய்துள்ளார். அந்தத் துயரங்கள் குறைவதற்குப் பதிலாகமேலும் மேலும் அதி கரித்துக் கொண்டே போகிறது.இதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இன்று தமிழகத்தில் உள்ள அனைத்துக்கட்சிகளும்- எத்தனையோ வேறுபாடுகளும் மோதல்களும் இருந்தாலும் அதற்கு அப்பாலும் ஒன்று பட்டு நின்று நம்முடைய தமிழர்களுக்காக குரல் கெடுக்க தயாராகவேண்டும்.

அப்போதுதான் டில்லியிலே இருப்பவர்களின் செவிகளிலே அது ஒலிக்கும். அப்போதுதான் செயற்படுவார்கள். இல்லையெனில் செயற்படமாட்டார்கள். அவர்களுக்கு அக்கறை இல்லை.

### இந்திய பிரதமருக்கு வேண்டுகோள்

நான் மீண்டும் நம் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் தயவு செய்து அங்கே திருகோணமலையிலே நடைபெறுகிற இந்தக் கலவரம் என்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எச்சரிக்கவேண்டும். உடனடியாக நம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அழைத்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நீங்கள் செவி சாய்க்க வேண்டும். இது உங்கள் கடமை. அந்தக் கடமையை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் பழ.நெடுமாறன்.

தமிழீழத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகள் மற்றும் தமிழீழ நிலைமைகளை தனது புத்தகத்தில் ஓவியர் புகழேந்தி பதிவு செய்துள்ளார். இந்நூலை இயக்குநர் மணிவண்ணன் வெளியிட்டார். தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சியின் செயலாளர் பெ.மணியரசன், தமிழ் தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு, இயக்குநர் சீமான் ஆகியோர் நூல் பற்றி கருத்துரை ஆற்றினர். (முற்றும்)(கு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### நாஜிகளின் வெற்றி 18



கூட்டத்தில் மொராக்கோ கலந்துகொள்ளாததால் மண்டேலா கடிதத்தைக் கொண்டு போய் அவரிடம் காட்டி கையெழுத்து பெற்று அனுப்ப வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மொராக்கோ 150 மைல்களுக்குப்பால் ஆரஞ்சுபிரீஸ்டேட்டில் குடியிருந்து வந்தார்.

ஓரிரு வாரங்களுக்கு முன்தாகத் தான் ஒட்டுநர் உரிமம் பெற்று இருந்தார் மண்டேலா. உரிமம் பெறப் போனபோது மண்டேலாவுக்கு நடுக்கம்தான் அவருக்கு முன்னர் வந்த ஒருவெள்ளை மாது நன்றாக கார் ஓட்டினாள். ஆய்வாளர் சரி சரி காரை அங்கே நிறுத்து என்ற போது சுவரில் காரை உராய விட்டார். அதைப் பார்த்த ஆய்வாளர் ஆகா நன்றாகப் பழகி விட்டு அடுத்த வாரம் வா என்றார். இதைப் பார்த்த மண்டேலா வெள்ளைக் காரிக்கே இந்தக் கதி என்றால் நம்பாடு இன்று பெரும்பாடு தான் என நினைத்தார்.

ஆனால் கவனமாக ஓட்டி உரிமம் பெற்று விட்டார். ஒரு நண்பரிடம் காரை வாங்கிக் கொண்டு இரவில் பயணமானார். போகும் வழியில் எதிரில் வந்த வண்டியுடன் முதல் முட்டு நடந்து. நல்ல வேளையாக சேதம் குறைவு ஓட்டி வந்தவனும் பரவாயில்லை போ எனக் கூறி விட்டான் அடுத்து ஒரு குன்றைத் தாண்டும் போது இரு வெள்ளைக்காரப் பையன்கள் சைக் கிளில் வந்து வண்டியில் மோதி விட்டார்கள். பையனுக்கு பெருங்காயம் படவில்லை தூக்கி விட மண்டேலா போனபோது வேறு ஒரு வண்டியில் வந்த வெள்ளையன் எங்கள் பையனைத் தொடாதே எனக் கத்தினான். பிறகு போலீஸ் வழக்கு இரவு பூராவும் காவல் நிலையத்தில்.

எப்படியோ கடைசியாக மொராக்கோவிடம் போய்க்கடிதத்தைக் கொடுத்தார். அவரும் கையெழுத்திட்டு விட்டார். மண்டேலா ஜோகன்ஸ்பர்க் திரும்பினார். எதிர்பார்த்தபடியே பிரதமரின் செயலாளரிடமிருந்து இருவரிகளில் நிராகரிக்கப்படுகிறது என்றும் இயக்கம் ஒடுக்கப்படும் என்றும் நறுக்கென்று பதிலில் கூறப்பட்டிருந்தது. இது போர்ப் பிரகடனம் இனி சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை என எல்லோரும் ஒப்புக்கொண்டனர்.

1612 ஏப்ரல் ஆறாம் நாளன்று கேப் முனையில் வெள்ளையர்கள் ஆபிரிக்காவுக்குள் காலடி எடுத்து வைத்த நாள் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் ஆபிரிக்கா வெள்ளையருக்கே என்று அந்த தினத்தை தேசிய தினமாகக் கொண்டாடி வந்தனர் அதே நாளன்று சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கலாம் எனப் போராட்டக்குழு முடிவு எடுத்தது.

மகாத்மா காந்தி கடைப்பிடித்த சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்ட முறையைக் கடைப் பிடிப்பது பற்றி விவாதம் எழுந்தது. காந்தியடிகளின் மகன் மணிலால் காந்தியும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அதுவே சாலச் சிறந்தது என எடுத்துரைத்தார். ஆயுதபாணியாக நின்ற அசுர அரசை எதிர்க்க காந்தியடிகள் கண்டவழிதான் சிறந்தது என பலர் வாதாடினாலும் சிலர் தேவைப்பட்டால் நேரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப உத்திகளை மாற்றிக்கொள்ளலாம் என வாதாடினர்.

இதை ஒரு தார்மீக ஒழுக்க விதியாக மட்டும் பாராமல் பயன் படுத்தப்பட்ட உலகினரால் பாராட்டப்பட்ட போராட்ட முறையாக இதைப் பார்க்கவேண்டும் எனத் தலைவர்கள் பேசினர்.

இதில் கட்டுப்பாடு அர்ப்பணிப்பைக் காட்ட முடியும் பெருவாரி மக்கள் பங்கு கொள்ளத் தக்க போராட்ட முறை அதுவே என முடிவு செய்யப்பட்டது. ஆபிரிக்கர்களும் இந்தியர்களும் எதைச் செய்தாலும் சட்ட மீறுதலாகத் தானே கருதப்படுகிறது. எனவே வெள்ளையருக்கு மட்டும் என்றுள்ள இடங்களில் அமைதியாகப் பாடிக்கொண்டு நுழையலாம் என முடிவெடுத்தனர். இதை விளக்கிப் பல கூட்டங்கள் நடந்தன.

இந்த மறியல் போராட்டங்களில் மெதாடிஸ்டு பாதிரியார்கள் சிலரும் பங்கேற்றனர் மாணவர் ,பெண்கள் ,வியாபாரிகள், டாக்டர் வழக்கறிஞர் என மறியல் பட்டியல் நீண்டது ஒரு போராட் டத்திற்கு ரெவரண்டு டான்ட்சி வர இயலவில்லை உடனே வயதான நடக்க முடியாத வியாபாரியாக இருந்த நானா சீதா (இந்தியர்) தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

ஓர் இடத்தில் மாஜிஸ்திரேட்டிடம் மனுக்கொடுக்க மண்டேலாவும் வால்டரும் போன போது படமெடுக்கவும் செய்தி சேகரிக்கவும் பெருங்கூட்டம் திரண்டு விட்டது மாஜிஸ்திரேட் விடுதலை இயக்கத்தின் மீது அனுதாபம் உள்ளவராக இருந்தார். அவர் விளம்பரம் செய்து அரசை ஆத்திரப்படுத்தாதீர்கள் எனஆலோசனை கூறினார்.

ஆபிரிக்கா தேசிய காங்கிரஸ் அலுவலகத்தில் மறியல் போராட்டத்தொண்டர்களாகப் பதிவு செய்து கொண்டு இருவர் மிகச் சுறுசுறுப்புடன் எல்லா வேலைகளையும் செய்தனர். அவர்கள் போலிஸ் உளவாளிகள் என்பது விரைவில் கண்டு பிடிக்கப்பட்டது அதே சமயம் காவல் துறையில் பணிபுரிந்த பல ஆபிரிக்கர்கள் போராட்டத்துக்கு மறைமுக ஆதரவு தந்தனர். மொத்தம் 8500 பேர் சிறை புகுந்தனர். மண்டேலாவும் கைதானார்.

இவர்கள் எல்லோர் மீதும் கம்யூனிச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டது வேதனை தரத்தக்க முறையில் கைதாகி மன்றத்தில் நின்ற டாக்டர் மொராக்கோ தனக்கென வக்கீல் வைத்து வாதாடினார் எவ்வளவோ வேண்டியும் ஏற்காததோடு சாட்சிக் கூண்டில் நின்று வெள்ளையரும் கருப்பரும் என்றைக்கும் சமம் ஆக முடியாது என்றும் கூறி அவமானப்படுத்திவிட்டார்.

வெளியிலோ கம்யூனிஸ்டுகள் ஆபிரிக்கா தேசிய காங்கிரசைக் கபளீகரம் செய்து விட்டனர் என்றும், தலைவாக்ள் சுகமாக வாழ தொண்டர்கள் சிறையில் வாடுகிறார்கள் எனவும் அவதூறுப் பிரச்சாரம் நடந்தது. ஆனால் தலைவர் மொராக்கோவின் வாக்குமூலம் தான் மானத்தைக் கெடுத்துவிட்டது.

1950மத்தியில் கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்டு விட்டதால் ஜே.வி.மார்க்ஸ் தனக்குப் புதிலாக இளைஞர் மன்றத்தலைமைப் பதவிக்கு மண்டேலாவைத் தேர்ந்தெடுக்கச் சொல்லிவிட்டு தலைமறைவாகி விட்டார். மாக்டனால்டு மாசகோவும் மாருபெருங்கோவும் மண்டேலாவை எதிர்க்க விரும்பினர். மாசகோ முன்னாள் கம்யூனிஸ்டு மாருபெங்கோ சவடா ல் பேர் வழி ஆனால் தேர்தலில் மண்டேலா பல மடங்கு வாக்குகள் வித்தியாசத்தில் மாரு பெங்கோவைத் தோற்கடித்தார். எச்.எம்.பாஸ்நர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண் டிருந்த போது போலிஸ் மண்டே லாவைக் கைது செய்தனர். கம்யூனிச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்கைப் பதிவு செய்தனர். ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

நடந்த இயக்கத்தின் போது சில தவறுகள் நடந்தன. ஆறு மாத இயக்கத்தின் போது இனியும் நீடிக்காமல் ஏறு முகமாக இருக்கும் போதே போராட்டத்தை நிறுத்துவது கௌரவம் என சிசுலு சொன்ன சரியான யோசனையை மண்டேலா உட்பட பலர் ஏற்கவில்லை இயக்கம் காலப் போக்கில் தொய்வடைந்தது. அவர் கூறியது போல கை ஓங்கியிருந்த போது விலக்கிக் கொண்டிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும் அனுபவ அறிவு சிறந்தது. என்பதை மண்டேலா அறிந்தார்.

(தொடரும்)

18.04.2006 முதல்
ஒவ்வொரு
செவ்வாய்க்கிழமைகளிலும்
உங்கள் வலம்புரியில்

- கணனி அடிப்படை விளக்கம்
- இணையநெற் அறிமுகம்
- இமெயில் விளக்கம்
- இந்தவார இணையத்தளம்
- க.பொ.த(உயர்தர) மாணவர்களுக்கான GIT உதவிக் குறிப்புக
- கொம்பியூட்டர் டிப்ஸ்

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் கணனிக் கல்விப் பகுதி வெளிவரவுள்ளது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். வாசிக்கத் தவறாதீர்கள்.

## யாழ்ப்பாணத்தில் போர்ச் சூழலை

## அரசாங்கம் ஏற்படுத்துகின்றது

## யாழ்.மாவட்ட அரசியல்துறை குற்றச்சாட்டு

(பளை)

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் சகோதரர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட அண்மைய செயற்பாடுகள் மூலம் போர் அபாயச் சூழலை அரசு ஏற்படுத்துகின்றது. என யாழ். மாவட்ட அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ். மாவட்ட அரசியல் துறை கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைப் போக்கின் சிறுபான்மை இனத்தினை அழிப்பதும் அவர்களின் வாழ்வியலை அழிப்பதும் இனங்களுக்கு இடையே மோதல்களை உருவாக்குவதுமே கடந்த கால வரலாறு இதனை எமது மக்கள் தெளிவாக அறிந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக திருகோணமலை மட்டக்களப்பு உள்ளிட்ட தமிழர் தாயக மாவட்டங்களில் மிகக் கொடூரமான படுகொலைகளை மேற்கொண்டு வந்த பயங்கரவாதம் யாழப்பாணத்தில் முஸ்லிம் சகோதரன் ஒருவரையும் சுட்டுப்படுகொலை செய்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் அரசு சமாதானத்தின் மீது பற்றுக்கொண்டதில்லை இது மீண்டும் ஒரு போர்ச் சூழலை ஏற்படுத்தும் என்றுஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள் ளது.(சு)

அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான

## கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

### பங்குபற்றும் கழகங்கள்

A பிரிவு
01.மத்திய வி.க.(ஆவரங்கால்)
02.வளர்மதி வி.க.(மட்டுவில்)
03.விக்னேஸ்வரா வி.க.(B) (அச்சுவேலி)

B பிரிவு
01.இந்து இளைஞர் வி.க.(ஆவரங்கால்)
02.கலைமதி வி.க.(B) (புத்தூர்)
03.ஐக்கிய வி.க.(காங்கேசன்துறை)

C பிரிவு
01.விக்னேஸ்வரா வி.க.(A ) (அச்சுவேலி)
02.பாரதி வி.க.(நாயன்மார்கட்டு)
03.மோகனதாஸ் வி.க (மட்டுவில்)

D பிரிவு
01.ஐக்கிய விளையாட்டுக் கழகம் (அரியாலை)
02.கலைமதி வி.க.(A) (புத்தூர்)
03.அண்ணா வி.க (தொண்டமனாறு)

### இறுதிச் சுற்று கால அட்டவணை

17.04.2006 A பிரிவு மத்திய வி.க எதிர் C பிரிவு விக்னேஸ்வரா வி.க.
B பிரிவு இ ந்து இளைஞர் வி.க.எதிர் D பிரிவு ஐக்கிய வி.க. அரியாலை

குறிப்பு:- போட்டியின் இறுதியில் புள்ளி அடிப்படையில வெற்றி பெற்ற இரண்டு கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் படும். இறுதிப்போட்டி பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இறுதிப் போட்டி பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

பரிசில்கள் 01வது பரிசு
(அ) அமரர் சி.அரியகுட்டி நினைவு சுற்றுக்கேடயம்
(ஆ) வெற்றிக் கிண்ணம்
(இ) ரூபா 5000 பணம்

02வது பரிசு
(அ) வெற்றிக்கிண்ணம்
(ஆ) ரூபா 3000 பணம்

சிறப்பு பரிசு ★ சிறந்த வீரன் (சகல துறை)
★ சிறந்த கழகம் (ஒழுக்கம்)

போட்டிகள் யாவும் வீனஸ்
வி.க.மைதானத்தில் நடைபெறும்

ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்

# மேற்கு வங்காளத்தில் 45 தொகுதிகள் இன்று முதல் கட்டமாக வாக்குப்பதிவு

(கொல்கத்தா)

மேற்கு வங்காள சட்டசபைக்கு 5கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் முதல் கட்டமாக இன்று 45 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்தத் தொகுதிகள் மேற்கு மிட்னாப்பூர் (21 தொகுதி, பங்குரா(13தொகுதி), புருலியா (11தொகுதி)ஆகிய 3மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

இங்கு மொத்தம் 227 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் 26 பெண்கள் ஆவர். 68இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.


இவர்களில் 33இலட்சம் பேர் பெண்கள் ஆவர். மொத்தம் 7ஆயிரத்து 906வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 7ஆயிரத்து 911 வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

மேலும் இவற்றில் ஏதேனும் பழுது ஏற்பட்டால், பயன்படுத்துவதற்காக கூடுதலாக ஆயிரத்து 538 வாக்குப் பதிவு இயந்திரங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த 3 மாவட்டங்களும் ஜார்க்கண்ட் மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ளன. இவை நக்சலைட்டுகள் நடமாட்டம் நிறைந்த மாவட்டங்கள் ஆகும். அவர்கள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளனர். எனவே, அமைதியாக தேர்தலை நடத்தி முடிக்க 300 கம்பெனி துணை இராணுவ படையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இன்று முதல்கட்ட வாக்குப்பதிவை சந்திக்கும் 45தொகுதிகளிலும் நேற்றுமுன் தினம் பிரசாரம் முடிவடைந்தது. முதல்-மந்திரி புத்ததேவ் பட்டாச்சார்யா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் பீமன் போஸ், பொலிட்பீரோ உறுப்பினர் பிருந்தா கரத் ஆகியோர் இடது சாரி வேட்பாளர் களை ஆதரித்து பிரசாரம் செய்துள்ளனர்.

காங்கிரஸ் வேட்பாளர்களுக்காக மாநில காங்கிரஸ் தலைவர் பிரணாப்முகர்ஜி, திருநாமுள் காங்கிரஸ் வேட்பாளர்களுக்காக மம்தா பானர்ஜி, பாரதிய ஜனதா வேட்பாளர்களுக்காக ஜார்க்கண்ட் முதல் மந்திரி அர்ஜுன் முண்டா, அருண் ஜெட்லி , ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா வேட்பாளர்களுக்காக மத்திய மந்திரி சிபுசோரன் ஆகியோர் பிரசாரம் செய்துள்ளனர். (க)



ஆண்டிபட்டி தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த முதல்வர் ஜெயலலிதா , உறுதி மொழியை வாசிப்பதையும் அருகில் (வலமிருந்து)தோழி சசிகலா , தினகரன் எம்.பி, அமைச்சர் பன்னீர் செல்வம் ஆகியோரையும் படத்தில் காணலாம்..

# கருணாநிதியை எதிர்த்து தேர்தல் மன்னன் போட்டி

(சென்னை)

ராயபுரம் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர், அமைச்சர் ஜெயக்குமார் நேற்று மனுத்தாக்கல் செய்தார். கருணாநிதியை எதிர்த்து சேப்பாக்கத்தில் தேர்தல் மன்னன் ஆர்.பத்மராஜன் சுயேட்சையாக 76வது முறையாக மனுத்தாக்கல் செய்திருக்கிறார். சட்டசபை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலுக்கு இரண்டாவது நாளான நேற்று அமைச்சர் ஜெயக்குமார் உட்பட பலர் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். ஜெயக்குமார் ராயபுரம் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஜெயக்குமார்.

கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியான கலெக்டரின் நேர்முக உதவியாளர் நம்பிராஜனிடம் நேற்று பகல் 12.45 மணி அளவில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அவருடன் ராயபுரம் பகுதி அ.தி.மு.க. செயலாளர் இரா.பழனி, மாவட்ட பேரவை செயலாளர் இ.பாபு உள்ளிட்ட திரளான அ.தி.மு.க.வினர் சென்றிருந்தனர். இதே போல பூங்காநகர் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கு.சீனிவாசனும் நேற்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவர் தனது வேட்புமனுவை சேப்பாக்கத்தில் உள்ள நில நிர்வாக உதவி ஆணையாளர் கார்த்திகேயனிடம் தாக்கல் செய்தார்.

போடி தேனி மாவட்டம் போடி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் பி.ஆர். பார்த்தீபன் நேற்று மதியம் 12.20மணியளவில் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வழங்கல் அதிகாரி ஆர்.புருஷோத்தமனிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். நகரதுணை செயலாளர் ஜி.ஆர்.பழனிராஜன், மாற்று வேட்பாளராக மனுத் தாக்கல் செய்தார். அவருடன் ராம்ராஜ் எம்.எல்.ஏ, அவைத் தலைவர் கனல்கண்ணன் மற்றும் ஏராளமான அ.தி.மு.க. கூட்டணி கட்சியினர் உடன் சென்றனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை எதிர்த்து மன்னன் ஆர். பத்மராஜன் சுயேட்சை வேட்பாளராக நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார். அவர் 76ஆவது முறையாக தேர்தலில் போட்டியிடுகிறார். இதற்கு இந்திராகாந்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை எதிர்த்து இவர் சுயேட்சையாக போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சேப்பாக்கம் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் தலித் குடிமகன் நேற்றுவேட்பு மனுதாக்கல் செய்தார். பூங்கா நகர் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கு.சீனிவாசன் சேப்பாக்கம் நில அளவை உதவி ஆணையாளர் கார்த்திகேயனிடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

நிலக்கோட்டை திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் தேன்மொழி நேற்று மதியம் நிலக்கோட்டையில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நில அதிகாரி முகம்மது பாருக்கிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். அவருடன் அ.தி.மு.க. பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், அமைச்சர் விசுவநாதன் மற்றும் ஏராளமான அ.தி.மு.க. , கூட்டணி கட்சியினர் உடன் சென்றனர்.

நாட்றம்பள்ளி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.ஜி.சுப்பிரமணி, தேர்தல் அதிகாரி பி.முருகானந்தத்திடம் மனுத் தாக்கல் செய்தார். மாற்று வேட்பாளராக கே.ஜி. சுப்பிரமணியத்தின் தம்பி கே.ஜி.ஜெயசங்கர் மனுத் தாக்கல் செய்தார். அவர்களுடன் மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் மரியபெலிக்ஸ், மாவட்ட இளைஞரணி செயலாளர் ஏ.ஆர். ராஜேந்திரன், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் சாமிக்கண்ணு, கேசவன், செல்வம் , மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் சகாதேவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க)

# நேபாள இளவரசரை காதலித்த இளவரசி அர்ஜுன் சிங்கின் பேரனை மணக்கிறார்

(புதுடெல்லி)

நேபாளத்தில் மன்னர் ஆட்சி நடைபெற்று வருகிறது. 1951ஆம் ஆண்டு வரை ரானா குடும்பத்தினர் ஆட்சி நடந்தது. இவரது வழியில் வந்தவர் இளவரசி தேவயானி ரானா. இவரது தந்தை பசுபதி சாம் ஷ்கர் ரானா. தற்போது மன்னருக்கு எதிராக ராஷ்ட்ரீய பிரஜாதன்ரிக் கட்சியை தொடங்கியுள்ளார்.



தேவயானி ராணி நேபாள மன்னர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த திபேந்திரா தனது குடும்பத்தினரை கொன்று துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

2001 ஆம் ஆண்டு இந்த சம்பவம் நடந்தது. நேபாள இளவரசரை காதலித்த இளவரசி தேவயானி மத்திய மனிதவள மேம்பாட்டு துறை மந்திரி அர்ஜுன்சிங்கின் பேரன் அஸ்வார்யாசிங்கை மணக்கிறார்.

திருமணம் தொடர்பாக இருவரது வீட்டிலும் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக அர்ஜுன்சிங்குக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக அஸ்வார் யாசிங்கின் தாயார் பினாசிங்கிடம் கேட்ட போது, எல்லா விஷயங்களும் முடியாத நிலை யில் இதுபற்றி கருத்துத் தெரிவிக்க முடியாது என்றார். (க)

இந்திய வலம்

# ஸ்ரீநகரில் குண்டுவெடிப்பு; 9 தீவிரவாதிகள் கைது

(ஸ்ரீநகர்)

ஸ்ரீநகரில் நடந்த குண்டுவெடிப்பில் 5 பேர் பலியான சம்பவம் தொடர்பாக தீவிரவாதிகள் 9பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் கடந்த வெள்ளிக்கிழமை காங்கிரஸ் அலுவலகம் உள்ள எக்ஸ்சேஞ்ச் ரோடு உட்பட 7 இடங்களில் குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்தன.

இதில் 2 பெண்கள் உட்பட 5பேர் பலியானார்கள். மேலும் பாதுகாப்புப் படை வீரர்கள் 10பேர் உட்பட 35பேர் காயமடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு ஜமாய்த்-உல்-முஜாகிதீன், ஜெய்ஸ்-இ-முகமது, இஸ்லாமிக் முன்னணி மற்றும் அல்-மன் சூரியன் ஆகிய 4 தீவிரவாத அமைப்புகள் பொறுப்பு ஏற்பதாக அறிவித்தன.

9 தீவிரவாதிகள் கைது இந்த நிலையில் ஜெய்ஸ்-இ-முகமது என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 9பேரைநேற்று முன் தினம் பொலிஸார் கைது செய்தனர்.

ஸ்ரீநகரில் இருந்து அஜாஸ் பாண்டிபுரா என்ற இடத்துக்கு இவர்கள் மினிபஸ் ஒன்றில் தப்பிசெல்ல முயன்றபோது பொலிஸார் 9பேரையும் மடக்கிப் பிடித்தனர்.

கைதானவர்களில் 3பேர் பண்டிபுரா பகுதியையும், மற்ற 6பேரும் ஸ்ரீநகரையும் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.

மேலும் போக்ரி கடால் பகுதியில் நடந்த குண்டு வெடிப்பில் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக துப்பு கிடைத்துள்ளது. (க)



கொல்கட்டாவில் சமாஜ்வாடி கட்சி வேட்பாளரை ஆதரித்து நடிகை ஜெயப்பிரதா பிரசாரம் செய்வதைப் படத்தில் காணலாம்.

# நடிகர் சல்மான்கான் வெளிநாடு செல்ல அனுமதி

(ஜோத்பூர்)

அபூர்வ வகை மானை வேட்டையாடிய வழக்கில் பிரபல இந்தி நடிகர் சல்மான்கானுக்கு ஜோத்பூர் கோர்ட் 5ஆண்டு ஜெயில் தண்டனை விதித்தது. இதனை அடுத்து சிறையில் அடைக்கப்பட்ட அவர் ஜாமீன் பெற்று சில தினங்களுக்கு முன்புவெளியே வந்தார்.

இந்நிலையில் சல்மான்கான் சார்பில் ஜோத்பூர் செசன்சு கோர்ட் மற்றும் தலைமை ஜுடிசியல் மஜிஸ்திரேட்டு கோர்ட்டு ஆகியவற்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் அமெரிக்கா, இங்கிலாந்து , கனடா மற்றும் டுபாய் போன்ற நாடுகளில் நடக்க இருக்கும் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இருப்பதால் வெளிநாடு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஏற்று நடிகர் சல்மான்கான் ஏப்ரல் 17ஆம் திகதி ஜுன் 14ஆம் திகதி வரையில் வெளிநாடு சென்று திரும்ப அனுமதி வழங்கி உத்தரவிட்டனர்.

தண்டனையை எதிர்த்து தொடர்ந்துள்ள சல்மான்கானின் அப்பீல் மனு ஜுன் 19ஆம் திகதி விசாரணைக்கு வரஇருக்கிறது.(க)

# பிரதமர் வீட்டுக்கு செல்ல முயன்ற உமாபாரதி, மதன்லால் குரானா கைது

(புதுடெல்லி )

வணிகர்களுக்கு ஆதரவாக, டெல்லியில் பிரதமர் மன்மோகன்சிங் வீட்டுக்கு ஊர்வலமாக செல்லமுயன்ற உமாபாரதி, மதன்லால் குரானா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

டெல்லியில் அனுமதிபெறாத கடைகளைப் பூட்டி 'சீல்' வைக்கவும் கட்டிடங்களை இடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கையை கண்டித்தும், டெல்லிக்குழு மாநில அந்தஸ்து வழங்கக் கோரியும் பிரதமர் மன்மோகன் சிங் வீட்டுக்கு ஊர்வலமாக சென்று மனு கொடுக்கும் போராட்டத்தை பாரதீய ஜனதா முன்னாள் தலைவர் மதன்லால் குரானா அறிவித்து இருந்தார்.

அதன்படி, நேற்றுமுன்தினம் டெல்லி ஜந்தர் மந்தர் அருகே திரளான வணிகர்கள் மற்றும் தொண்டர்கள் திரண்டனர்.

பாரதீய ஜனதாவில் இருந்து நீக்கப்பட்ட அதிரடிப் பெண் சாமியார் உமாபாரதியும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கைது ஊர்வலம் புறப்படுவதற்கு முன்பு பொலிஸார் தடுத்து நிறுத்தி குரானா, உமாபாரதி உட்பட திரளான தொண்டர்களை கைது செய்தனர். (க)



பா.ஜ. தலைவர் ராஜ்நாத்சிங் ரத யாத்திரையில் ஹாஷ்பூர் வந்து பின்னர் அங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது...

நல்லதைச் செய்ய வேண்டும். நல்லதைச் சொல்ல வேண்டும். நல்லதை நினைக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் ஈடுபட்டால் யாவும் நல்லனவாகவே இருக்கும்.

-சுவாமி இராமதாஸர்

வலம்புரி

## சர்வதேச அமைப்புகள் கைவிட்டுப் போகலாமோ!

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களையடுத்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் சில வெளியேற நினைத்துள்ளதாக தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் யாழ்ப்பாணத்தில் இயங்குவதன் மூலமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சில உதவிகள் கிடைக்கின்றன என்பதற்கப்பால், யாழ்ப்பாணத்தில் இடம்பெறக்கூடிய வன்முறைச் சம்பவங்கள், தாக்குதல்களின்போது தம்மை ஆற்றுப்படுத்துவதற்கு-ஆதரவளிப்பதற்கு உலக நாடுகளுக்கு உண்மையைத் தெரிவிப்பதற்கு சர்வசே அமைப்புகள் இருக்கின்றன என்ற நம்பிக்கை யாழ். மக்களிடையே இருக்கின்றது.

இந்த நம்பிக்கை கூட யாழ்ப்பாணத்தின் இருப்பிற்கும், மீள்குடியமர்வுக்கும் உதவின என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில், சர்வதேச அமைப்புகள் சில யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதானது துரதிஷ்டவசமானது.

யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தின் சுமைகளை தங்கள் இதயங்களில் சுமந்த வண்ணமே உள்ளனர்.

வாகனங்கள் ஓடுகின்றன, வர்த்தக நிலையங்கள் இயங்குகின்றன, மக்கள் தங்கள் தேவைகளுக்காக நாளாந்த கடமைகளில் ஈடுபடுகின்றனர் என்ற காட்சி வெளிப்பார்வைக்குத் தெரிந்தாலும் ஆழ்மனதில் இருக்கக் கூடிய சோகத்தின் உயர்வை, அதன் கனத்தை யாராலுமே கணக்கிட்டுக் கொள்ள முடியாது.

யுத்தத்தின் கோர தாண்டவத்திற்கு தங்கள் பிள்ளைகளை, குடும்பத் தலைவர்களை, பெற்றவர்களை, உறவுகளைப் பறிகொடுத்து விட்டு அவர்களின் உருவப் படங்களைப் பார்த்து அழுதவண்ணம் காலம் கடத்தும் அந்தப் பரிதாபத்தை யாருமே கண்டு கொள்வதில்லை.

எல்லாவற்றையும் இழந்து விட்டு இன்னமும் இந்த மண்ணில் வாழ்வதற்குள் நம்பிக்கைகள்- எதிர்பார்ப்புக்கள்-எதிர்காலச் சந்ததியின் உருவாக்கங்கள் என்ற பல்வேறு அம்சங்கள் இடம்பிடித்துக் கொள்கின்றன.

இவ்விதம் ஏக்கத்தின் மத்தியிலும் தமிழ் மக்களிடம் இளையோடி இருக்கும் நம்பிக்கைகள் - எதிர்பார்ப்புகளுக்கு சர்வதேச சமூகம் வழங்குகின்ற வெகுமதிதான் என்ன?

யுத்தம் தொடரும் வாய்ப்பு தெரிகின்றது என்பதற்காகமூடை முடிச்சைக் கட்டுவதுதான் பொதுநலமாயின் யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டுள்ள தமிழ் மக்களுக்கு அந்த அமைப்புகள், பொதுநலத் தொண்டர்கள் கூறுகின்ற ஆறுதல் வார்த்தைதான் என்ன?

இது யாழ்ப்பாணத்து மக்கள் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளிடம் வினயமாகக் கேட்கும் வினா.

## தமிழர் -முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைப்பதா? அமைச்சர் அதாவுல்லாவுக்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தென் தமிழீழத்தில் தமிழர்- முஸ்லிம் தரப்பினரிடையேயான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகக் கூறி அமைச்சர் அதாவுல்லாவுக்கு நூற்றுக் கணக்கான மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கல்முனைக்குடி ஜும்மா மசூதி அருகே நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தேசிய காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெற இருந்தது.

தமிழர் -முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அமைச்சர் அதாவுல்லாவை அனுமதிக்கமுடியாது என்று கூறி அப்பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் முற்றுகையிட்டனர்.

அதாவுல்லாவின் பிரிவினை முயற்சியைக்கண்டிக்கும் பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர் அதாவுல்லாவுக்கு எதிராக அவர்கள் கண்டன முழக்கங்களை எழுப் பினார்கள்.

இதனால் அப்பகுதியில் சிறப்பு அதிரடிப்படை மற்றும் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டனர். (க)

## வன்முறையை தூண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுங்கள்!

### ஜனாதிபதி பொலிஸாருக்கு பணிப்புரை

(திருகோணமலை)

திருகோணமலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் அமுலுக்கு வந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை 6.00 மணியுடன் நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளைத திருகோணமலையில் இணக்கலவரத்தை தூண்டும் முயற்சியில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தீய சக்திகளினால் மேற்கொள்ளப்படும் இந்தச் சதியில் பொலிஸார் மற்றும் படையினர் சிக்கிவிடக் கூடாது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி அமைதியை சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கவேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை திருகோணமலை மரக்கறி குண்டு வெடிப்புச் சம்பவம் உட்பட அங்கு இடம்பெற்ற தாக்குதல்கள் காரணமாக மரணமான பொதுமக்களுக்கும் படைத்தரப்பினருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (க-9)

## 25 பேரின் தொகுதி அமைப்பாளர் பதவிகள் விரைவில் பறிபோகுமாம்

### ஸ்ரீ.சு.கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் 25 பேரை அப்பதவிகளிலிருந்து நீக்கப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பாக உரிய வகையில் செயற்படாமலும் இருந்துவரும் 25 தொகுதி அமைப்பாளர்களை எதிர்வரும் மே தினத்தின் பின்னர் நீக்கி விட்டு அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கவுள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போதும் தங்கள் தொகுதிகளை வெற்றி பெறச்செய்ய செயல்படாதவர்களும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல்களை உரிய வகையில் தயாரித்துகையளிக்க முடியாது போன அமைப்பாளர்கள் தொடர்பாகவும் தற்போது விபரங்களை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்சி ரீதியில் முழுமையான பொறுப்புக்களை நிறைவேற்ற சந்தர்ப்பங்கள் இருந்த போதும் சில அமைப்பாளர்கள் தங்கள் பொறுப்புக்களை உரிய வகையில் நிறைவேற்றவில்லை.

எனவே இவ்வாறு செயல்படாத அமைப்பாளர்களை தொடர்ந்தும் அமைப்பாளர்களாக வைத்திருப்பதில் எவ்வித பயனுமில்லை என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (க-7)

## யானை தாக்கி ஒருவர் பலி

வீட்டில் இருந்த நபரை மதம் கொண்ட யானை தாக்கியதில் ஸ்தலத்தில் பலியான சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியவில் புத்தளம் மயிலங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு பலியானவர் 63 வயது நிரம்பிய ஏ.டபிள்யூ டி.சிறிசேன என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் தனது வீட்டில் நித்திரையில் இருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைகால்கள், விலா எலும்புகள் என்பன முறிந்த நிலையில் சடலமாக இவர் மீட்கப்பட்டார்.

மரண விசாரணையை நடத்திய புத்தளம் திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எச். எம் .சமீவு விபத்து மரணமென தீர்ப்பளித்தார். (க-5)

## புண்ணியமூர்த்தி காலமானர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தில் நீண்ட காலமாக அறிவிப்பாளராகவும் தமிழ்ப் பிரிவின் செய்தி ஆசிரியராகவும் பணியாற்றிய சுப்பையாப்பிள்ளை புண்ணியமூர்த்தி (வயது-76) நேற்றையதினம் அமெரிக்காவில் காலமானார்.

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்ட புண்ணியமூர்த்தி 1954 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராக இணைந்து சுமார் 40 வருடங்கள் பணியாற்றினார். இவரின் சேவையை பாராட்டி கனடாவில் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## இரு தரப்பிலும்தவறு -கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தென்தமிழீழத் தளபதிகளின் பயண ஒழுங்கு இரத்துசெய்யப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமுமே காரணம் என கண்காணிப்புக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயண ஒழுங்குகள் குறித்து இறுக்கமான நடைமுறைகளை அரசாங்கம் கடைப் பிடிக்கிறது. இதே போன்று கூடுதலான கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விதிப்பதாகவும் கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்வ் ஹென்றிக்சன் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் கடந்தகாலத்தில் கடைப்பிடித்தமை போன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல்பயணத்திற்கு அரசாங்கம் உலங்கு வானூர்த்தியை வழங்கியிருந்தால் தற்போதைய நெருக்கடியை தவிர்த்திருக்கலாம் எனவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனீவாப்பேச்சில் கலந்துகொள்ளும் நோக்கம் இரு தரப்பினருக்கும் இருப்பது போல் தென்படவில்லை என குறிப்பிட்டிருக்கும் கண்காணிப்புக்குழு தலைவர் இரு தரப்பி லும் பொறுப்பில்உள்ளவர்கள் மக்களின் நலனில் அக்கறை கொள்ளவில்லை எனவும் குற்றஞ்சுமத்தியுள்ளார். (ச-5)

## சகல கல்வி வலயங்களுக்கும் இணைப்பு உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் மாகாணக் கல்வித் திணைக்களம் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்திவருகின்றது.

இவ்வாறு வலய மட்டத்தில் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இணைப்பு உத்தியோகத்தர் இணைக்கப்படுவார்கள் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் நடைபெறும் பாடசாலைகளின் எண்ணிக்கையும் தரங்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்துவருவதனால் இந்தவிடயம்தொடர்பாக கண்காணிப்பு மற்றும்மேற்பார்வை நடவடிக்கைகளை அதிகளவில் மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடாசலைகளில் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் பணிகளை மேற்கொண்டு வரும் ஆசிரியர்களுக்கு விசேட கல்விப்பயிற்சிகளும் வழங்கப்படும் அதேசமயம் மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் நடாத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

## காரைதீவு பிரதேச சபை திறப்பு

(அம்பாறை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபை நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.பத்மநாதன் அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி மற்றும் நிஜாமுதீன் ஆகியோரும் பங்கேற்றனர். கடந்தமார்ச்மாதம் 30ஆம் திகதிநடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் காரைதீவு பிரதேச சபையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியது.

5 உறுப்பினர்களுக்கான தேர்தலில் கூட்டமைப்பின் 4 உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரசின் ஒரு உறுப்பினரும் வெற்றி பெற்றனர்.

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட மூன்று கிராமங்கள் முன்னர் நிந்தாவூர் பிரதேச சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன. (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உலகில் வாழ வேண்டும். அதற்கு வேலை செய்தாக வேண்டும். கடமைகளைச் செய்யாமல் யாரும் வாழமுடியாது. எந்த வேலையைச் செய்தாலும் அதற்கு விளைவு ஒன்று உள்ளது. அது நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம் இரண்டும் கலந்ததாகவும் இருக்கலாம். ஆனால் விளைவு ஒன்று இருந்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ்ப்பாண மக்களுக்கு படையினரின் அறிவுறுத்தல்

யாழ்ப்பாண மக்களுக்கு படையினர் விடுக்கும் விசேட அறிவித்தல் என்ற தலைப்பில் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் செய்திக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளது. அதன் விபரம் வருமாறு;

தற்போது குடாநாட்டில் நிலவும் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் ஒரு சில நபர்கள் பாதுகாப்புப் படையினர்மீது தாக்குதலை நடத்துவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

தற்போது நிலவும் அமைதியை சீர்குலைத்து பொதுமக்களை துன்பப்படுத்தும் வகையில் உங்களது வீடுகளைச் சோதனையிடச் செய்வதே இவர்களின் பிரதான நோக்கமாகும்.

இவ்வாறான நபர்களின் தந்திரங்களுக்கு ஏமாற்றம் அடைய வேண்டாம் என பொது மக்களாகிய உங்களை நாம் கேட்டுக்கொள்வதோடு இச் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்கள் பற்றிய தகவல்களை வழங்கி உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

வலிகாமம் பகுதியில் வசிக்கும் மக்கள் 021 222 2267 அல்லது 021 226 3398 என்ற இலக்கத்திற்கும் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள் 021 226 3145 அல்லது 226 3370 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க முடியும்.

நிரந்த சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்கவும், நீங்கள் வழங்கும் தகவலைப் பேணிப் பாதுகாக்கவும் பாதுகாப்புப் படையினராகிய நாம் கடமையுடன் செயற்படுவோம் எனவும் அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)

# ரணில் - மகிந்த சந்திப்பு விரைவில் இடம்பெறும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையே விசேட பேச்சுவார்த்தை ஒன்று விரைவில் நடைபெறவிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இப் பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அதிகாரப் பகிர்வு விடயத்தில் தமது ஒத்துழைப்புத் தேவைப்பட்டால் உடனடியாகத் தான் நாடுதிரும்ப தயார் என ஜனாதிபதிக்கு ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அண்மையில் சர்வகட்சி மாநாடு நடைபெற்ற போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய ஜனாதிபதியை தனித்தானியாகச் சந்திப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தர்ப்பம் தேவைப்படுவதாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமையவே இவர்களுக்கிடையில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இச் சந்திப்பில் இனப்பிரச்சினை தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதுடன் தேசிய அரசியலில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்தும் ஆரயப்படும்என அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (சு-7)

## அரச ச.செ...

கொள்வார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

எங்களுக்குத் தெரிந்தளவில் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக் கொள்வதை விடுதலைப்புலிகள் உணர்த்தவில்லை. இருந்தும் அரசாங்கம் பூரண தியாகத்துடன் செயற்படுகின்றது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் மூலம் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமாதானம் ஒன்று உருவாகும் என்ற எதிர்பார்ப்பிலேயே தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்களை நாங்கள் கண்ணுற்றும் பொறுமையுடன் இருக்கின்றோம்.

இதனால் சமாதானத்தினை நோக்கிச் செல்லும் பயணத்திற்கு தடைஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளுக்கு இடமளிக்காமல் இருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என பாலித ஹொகன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றைய சந்திப்பின்போது குறிப்பிடத்தக்க இணக்கப்பாடு ஏற்பட்டதாக கூற முடியாது என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸ்ரோட்டியர் தெரிவித்தார்.

ஆயினும் இன்றைய தினம் மீண்டும் இச் சந்திப்பு இடம்பெறும் என்பதை அவர் உறுதிப்படுத்தினார். (ந-4)

## காலக்கெடு...

சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக்கொடுத்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தலுக்குச் செல்லுமாறு மகிந்தவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தனது கட்சிக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே ஜே.வி.பி.இந்த முடிபுக்கு வந்துள்ளது.(ந)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரச படைகள் ஊடுருவி உள்ளன

## வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் அரச படைகள் வேண்டுமென்றே யுத்தத்தைத் திணிக்கின்றன என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மை நாட்களாக வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அத்துமீறி உள்நுழையும் படையினரும், ஆழ ஊடுருவும் படையினரும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள அரச படையினர் மக்கள்மீது கொடூரமான இன வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

வவுனியா மன்னார் எல்லைக் கிராமத்தில் வயலுக்கு உழவு ஊர்தியில் சென்ற மக்கள் மீது நடத்திய தாக்குதல் இன ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு செயற்பாடாகும்.

தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளில் அரச படைகளும் துணை இராணுவக் குழுக்களும் தமிழ் மக்கள் மீதான இன ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

இத்தாக்குதல் நடவடிக்கையானது வலிந்த போர்த்திணிப்பு நடவடிக்கையாகும் என்றும் ஞானம் தெரிவித்தார். (ச-4)

# காவல்துறையின் 2006 முதல் அணி பயிற்சி முடித்து வெளியேறியது

(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறையின் தற்போதைய ஆண்டிற்கான முதலாம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழீழக் காவல்துறையின் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு கல்லூரிக் கண்காணிப்பாளர் தமிழரசன் தலைமை தாங்கினார்.

பொதுச் சுடரினை அடம்பன் காவல் பணிமனைப் பொறுப்பாளர் அன்ரன் ஜோசப்பும், தமிழீழத் தேசியக்கொடியை காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவனும், தமிழீழக் காவல்துறைக் கொடியினை காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகனும் ஏற்றினர்.

இதைத் தொடர்ந்து பயிற்சி நிறைவு செய்தவர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றுக் கொண்டார்.

தமிழீழக் காவல்துறையின் ஆய்வாளர்கள் கிருபாகரன், இமாக்கிறேர், விஜயகுமார் மற்றும் துணை ஆய்வாளர் கபிலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர் .தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (ந)

## 4 ம் ஈழப்...

வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி வடக்குக் கிழக்கில்உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை அரசாங்கம் களையாததைக் காரணமாகச் சுட்டிக்காட்டி விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து வெளியேறலாம் என்றும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது ஆயுதக் களைவிற்காக விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திற்குக் காலக் கெடு விதிக்கப்படக் கூடும் என்றும் கூறப்படுகின்றது.

அத்தகைய ஒரு காலக்கெடு விதித்து அதற்குள் வடக்கு - கிழக்கில் இருக்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையுமாறும் இல்லையேல் தமது இயக்கம் யுத்தத்திற்குத் திரும்பும் என்றும் விடுதலைப்புலிகள் அறிவிக்கலாம்.

இத்தகைய சிக்கல் மிக்க நிலையே அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யுத்தத்திற்குத் தயாராகவிருப்பதற்கான பின்னணியின் காரணம் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-4,5)

## ஜெனீவாப் பேச்சுக்கு...

எமது கிழக்குப் பிராந்திய தளபதிகளின் பயண ஒழுங்கை வழமைபோன்று ஏற்படுத்தித்தரும்படி உங்களிடமும் கண்காணிப்புக் குழுவிடமும் கோரியிருந்தோம்.

முதற்கட்ட ஜெனிவாப் பேச்சு முடிவடைந்து ஒரு குறுகிய காலப் பகுதியிலேயே உங்களிடம் இக் கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம்.

எமது தளபதிகளுடைய பயண ஒழுங்கிற்கு திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அரசு வான்வழிப் போக்குவரத்தை நிராகரித்துள்ளது என கண்காணிப்புக் குழு எமக்கு அறிவித்திருந்தது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த வழிகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்தமை எமது தலைமைப் பீடத்திற்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்தது.

இந்நிலையில் அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சுக்கான தீர்மானங்கள் எடுக்க வேண்டிய அவசரம் கருதியும் இதற்காக எமது தளபதிகளின் பயணம் நடைபெறவேண்டியிருந்த அவசியம் கருதியும் ஏற்கனவே நடைமுறையிலிருந்து கடல் வழிப் பயண ஒழுங்கு பற்றி கண்காணிப்புக்குழுவிற்கு நாம் பரிந்துரைத்தோம்.

இந்த நடைமுறைக்கு அரசு தனது கண்காணிப்புக் குழுவூடாக அறிவித்ததோடு எமது தளபதிகள் இலங்கைக் கடற்படையால் ஒழுங்குபடுத்தப்படும் படகிலேயே செல்லாம் என்றும் அரசு நிர்ப்பந்தித்தது.

அரசாங்கம் அனைத்துக் கட்சி மாநாடுகளை ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கு முன் நடாத்திய அதேநேரத்தில், எமது மத்திய குழு கூடுவதற்குக்கூட பலதடைகளை விதித்துள்ளது.

இவற்றினுள் முதன்மையாக எமது தளபதிகளினது பயணங்களையும் செயற்பாடுகளையும் இலங்கை அரசாங்கமானது முடக்கியுள்ளதுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மதித்துச் செயற்படவில்லை.

இச் சூழ்நிலையானது எமது விடுதலை இயக்கம் குழப்பங்கள் நிறைந்த சூழ் அமைவை உருவாக்கவல்ல பல வரையறைக்குள் செயற்படுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளது.

இலங்கை அரசின் இச் செயற்பாட்டை ஜெனீவாப் பேச்சுக்கு விடுதலைப்புலிகளை செல்லவிடாது தடுக்கும்ஒரு நிலைப்பாடாகவே நாம் விளங்கிக் கொள்கின்றோம்.

இக் கட்டத்திலேயே கண்காணிப்புக் குழுத் தலைவர் எம்மைச் சந்தித்து தான் ஒரு மாற்று யோசனையை முன்வைப்பதாகவும்அதனை இந்தத் தடவை தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அவர் தான் ஒரு தனியார் படகை ஒழுங்குபடுத்துவதாகவும் அதில் அவர் உட்பட கண்காணிப்புக் குழுவினரும் எமது தளபதிகளோடு பிரயாணிப்பதாகவும் இலங்கைக் கடற்படையின் சம்பந்தமோ தலையீடுகளோ இருக்காது என உறுதியளித்தார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவம் கருதி இதனை ஒரு தற்காலிக ஏற்பாடாக எமது தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டது.

கண்காணிப்புக் குழுத் தலைவரின் வாக்குறுதிகளை முழுமையாக நம்பியே எமது தளபதிகள் பயண ஒழுங்கை மேற்கொண்டனர்.

துரதிஷ்டவசமாக எமது தளபதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக கடற்படையினர் நடந்து கொண்டமையினாலும் கண்காணிப்புக் குழுத்தலைவரினது வாக்குறுதிகளுக்கு எதிர்மறையாக சம்பவங்கள் நடைபெற்றமையினாலும், எமது தலைமைப்பீடத்தின் மத்தியகுழுக் கூட்டம் நடை பெறமுடியாது போய்விட்டது.

இக் கூட்டத்தில்எமது கிழக்குத் தளபதிகளைச் சந்தித்து உறுதியான முடிபுகள் எடுக்காமல் நாம் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள முடியாது என்பதை உங்களுக்கு முன்பே விளக்கியிருந்தோம்.

எதிர்கால முன்னெடுப்புகளுக்கு யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்தவும் குறிப்பாக ஜெனீவாப் பேச்சுக்களில் உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்புடுத்தவும் இதுவரை காலமும் பேணப்பட்டு வந்த நடைமுறைகளை மாற்றியமைக்க அனுமதிக்காமலும், இலங்கை அரசை வலியுறுத்தி ஒரு வழிக்கு கொண்டு வருவது அவசியமானது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

இவ்வற்றின் ஊடாகத்தான்வருங்காலத்தில் பேச்சுகளுக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்கலாம். இவ்வாறுஅக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4,5)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.